தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் கஅசுடுஙுல மேமீ எவ. [இல. க.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
க. கடவுள்துதி.....	க	அ. ருக்குவேதசம்ஹிதை.....	கக
உ. விளம்பரம்.....	உ	கூ. மநுநூல்.....	கச
ஙு. ஆண்டுநிறைவு.....	உ	க0. பிரகிருதிசாஸ்திரம்.....	கஅ
சு. தத்துவபோதினி.....	சு	கக. அர்த்தசாஸ்திரம்.....	கஙு
ஞு. பெண்களுக்குக்கல்வி.....	ஞு	கஉ. சரித்திரம்.....	உ0
சூ. முண்டகோபநிஷத்து.....	அ	கஙு. இருமனையாகூடி.....	உக
எ. பகவத்கீதை.....	க	கச. பகவதகீதோபந்நியாசம்.....	உஉ
		கஞு. விளம்பரம்.....	உச

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்தானறியமாட்டார் - பிரமனே - ஆய்ந்தவன்பதந்தேடில்.

அநுபல்லவி.

பார்மீதும்பற்றற்று - சிராம்வழியைநாடி
சார்பாமவனருளே-நேராய்த்தேடுவாராகில். (ஆர்.)

சரணங்கள்.

க. ஆன்மகோடிகளிடத்து - அளவற்ற - ஆசைபுரியுகின்ற,
ஆர்த்தர்மனதில்வசிப்பான் - தயவுடன்- ஆநந்தமளிக்கவென்றே,
ஆந்தரியமாகவே - ஆங்காரத்தையடக்கி
ஆசையோடருள்மிகும் : ஆண்டவனைநினைத்தால்.....(ஆர்.)

உ. இல்லாமல்வருந்துகின்ற - உயிர்களுக்கு - இரக்கத்துடனேயுதவி,
இடர்களெல்லாவற்றையும் - நிவர்த்தித்து - இரவும்பகலுமாக,
இதயத்திலுறைகின்ற - இணையற்றவரசன்
இஷ்டமனுசரித்து - இன்பம்புரிவாராகில்.....(ஆர்.)

ஊ. ஈரேழுதியிடையுமற்று - எவ்வுலகத்தும் - ஈடிணையென்பதுமற்ற,
ஈசன்சுவரூபந்தன்னில்-கிஞ்சித்தேனும்- ஈண்டேயறியமுயல்வோர்,
ஈனமொன்றிகழாமல் - ஈன்றவரையிலும்
ஈதலேசதுரென - ஈய்ந்துகளிப்பாரெனில்.....(ஆர்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய, கா. தெய்வசிகாமணி முதலியாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ள வேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு -ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிக்கையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து ஏஜண்டுக்குத் தெரிவிக்கவேண்டியது.

ஆண்டுநிறைவு.

தன்னியாசிராகம் - திருபுடைதாளம்.

பரமபுருஷனுக்கு மங்களம் - அவர் - படைத்த உலகங்கட்கு மங்களம்.
பரக்கண்டமதற்குமங்களம் - அதில்-பலிக்கும்பொருள்களுக்கு மங்களம்.

பிராணிவகைகளுக்குமங்களம் - ஆதி - பஞ்சபூதங்களுக்கு மங்களம்.
ஆணுயிரனைவர்க்கு மங்களம் - அவர் - ஆராய்ச்சகலர்க்கு மங்களம்.
காலமழைகளுக்கு மங்களம் - கன - சோலைவனங்களுக்கு மங்களம்.
பயிரிடுமக்களுக்கு மங்களம் - மிக - முயலும்பந்தரங்கட்கு மங்களம்.
வணிகக்குலங்களுக்கு மங்களம் - வீலை - மணியினத்தொகைகட்கு மங்களம்.
சீராமரசியற்கு மங்களம் - வெகு - சூரப்படைகளுக்கு மங்களம்.
கலைதருமறிவிற்கு மங்களம் - அதில் - தலையாம்சோதனைகட்கு மங்களம்.
சத்யநிலைதனிற்கு மங்களம் - நல்ல - தத்வவழிகளுக்கு மங்களம்.
பக்தித்தொழில்களுக்கு மங்களம் - நிலை - முக்திபதவியிற்கு மங்களம்.
பிரமஸமாஜத்திற்குமங்களம் - அதின் - பாமசுகத்தினிற்கு மங்களம்.
வேதஸமாஜத்திற்கு மங்களம் - அதின் - போதமுயற்சிகட்கு மங்களம்.
தத்வபோதினியிற்கு மங்களம் - அதின் - சத்வப்பொருள்களுக்கு மங்களம்.

இந்தத் தத்துவபோதினியின் அப்தபூர்த்திதிருவிழாவை, இன்று இன்பக்கட வுளானவர் அன்புகூர்ந்து கொண்டாடிய வழியைக்கேட்க, இந்நாட்டின் மக்களனைவ ரும், ஆவல் கொண்டிருப்பார்களே. ஞானக்கண்ணுக்கு ஒளிதரும், இப்பத்திரிகை யின் ஆண்டுநிறைவிலல் தனதுநாள் சிறக்கவேண்டுமென, கர்மக்கண்ணிற்கு ஒளி தரும் ஆதித்தியன் ஒருபாலும்; சகலமதிகளுக்கும் இன்பந்தரும், இப்பத்திரி கையுடன் போட்டிசெய்வதைக்காட்டிலும், சரசமாடி இருகலைகளைப்பெற்று தன் குறைகளை நீக்கக்கருதி, அவ்வுற்சவத்தை தனது நாளில் கொண்டாட, விண்ணு லாவும் மதியொருபாலும்; விவாதப்பட்டு பிரமனைவேண்ட, அவர் தமது தலைப்ப டைப்பாகிய சூரியனுக்கு அப்பெருமையை அளித்தாற்போலும். ஆகிலும் சூரிய சந்திரர்கள் ராஜியாகி, பகலெலாமொருவனும், இரவெலா மொருவனுமாகப் பி ரித்துக்கொண்டு உற்சவம் கொண்டாடினர். ஊரெல்லாம் மணங்கள் ஓங்கினும்; இத்திருவிழாவின்மேலான இன்பத்தை மனதிற்கொண்டு, அவற்றைநோக்கி பூவின மெல்லாம் நகைத்து இதின் உண்மையானவும் சிரேஷ்டமானவும் மணத்தை நா டெலாம் பரவச்செய்தன. மணங்களில் முழங்கும் சகலவாத்தியங்களும் வெட்க, பூங்கள்ளுண்ட வண்டுகளும் பறவைகளும், மங்களகீதம் பாடின. இச்சமாஜம் வி ளக்கும்பலன்களை ஒருவாறேனும் விளக்க, விருகூராசிகளெல்லாம் மனமுவந்து அளவிறந்த பலன்களீந்தன. நாடுகளெல்லாந்திரிந்து, நன்றற்றத்தைச்சுமந்து, வே கமாயோடிவந்து, வாயுவே மனமுவந்து, ஆலவட்டத் தொழில்செய்தது. இத்திரு விழாவின் குணியினலே காலமும்பரிமளித்து, வசந்தமெனும் பெயரடைந்தது. இவ்வாறு நாடெலாங்களித்து, பலவிதப்பழங்களுண்டு, மணங்கள் மோர்ந்து, மலை யமாருதத்தாலும், மங்களவாத்தியங்களாலும், மனிதரும் மனவிமாரும், மனங்க ளித்து வசந்தமாடி இரவும்பகலுமாக, இன்பமேயனுபவித்தார்.

தத்துவபோதினி.

சோதரர்களே, கடந்தபத்திரிகையில் இம்மைச்சுகத்துக்கும் மறுமைச்சுகத்துக்கும் அனிவாரியமான சமமந்தமிருப்பதாய்ச்சொல்லி முடித்தோமல்லவா? முதலில் இம்மைச்சுகத்தின் சுவரூபத்தை விசாரித்தால் அந்த சம்மந்தம் எளிதில்விளங்கும். கடவுளின் படைப்பிலடங்கிய ஜீவகோடிகளனைத்திற்கும், சாமானியமாகப் பிரகிருதி யென்பதொன்றவிக்கப் பட்டிருக்கிறதல்லவா? இவ்விஷயத்தில் மனிதற்கும் மற்ற ஜீவஜந்துக்களுக்கும் பேதமில்லை. பசி, தாகம், உறக்கம், பெண்ணாசை, ஆகிய இந்நான்குமே பிரகிருதியாகும். இப்பிரகிருதிக்குத் திருப்தியுண்டாவதே சுகமென்றும், அதற்குத் திருப்தியில்லாமையே துக்கமென்றும்; எளிதில் ஏற்படும். ஜந்துசாமானியத்துக்கும் இது உண்மையாகிலும், ஜீவனோடு ஞானத்தையும் குறியாகக்கொண்டிருக்கும் மானிடன் விஷயத்திலும், இது அனுவயிக்குமோவென்கிற சங்கை ஜனிக்கலாம். இம்மைச் சுகம்வனையில் யோசித்தால், மனிதர்சுகமும் இத்தன்மையதேயாம். ஏனெனில் மறுமையென்பது ஒன்றில்லாவிடில், நன்றாய் உண்டு, குடித்து, உறங்கி, பெண்டுடன் வாழவேண்டுமென்பது தவிர மனிதற்கு வேறென்ன கவலையிருக்கும்? உண்ணச்சோறும், குடிக்கநீரும், உறங்கநிழலும், தழுவப் பெண்டிருமிருந்தால் போதுமல்லவா? ஊண்முதலியவற்றில் தாரதம்மியங்களிருக்கினும், கடைசியில் ஒவ்வொருவனும் உண்டு குடிப்பது அவனவன் வயிறுகொண்டவனையிலே யாகையால், நாறுரூபாய் வரும்படியுள்ளவனுக்கும், லக்ஷம் லக்ஷமாய் சம்பாதிப்பவனுக்கும் இவ்விஷயத்தில் என்னபேதம்? காட்டிலுள்ள மிருகங்களும் புற்பூண்டுமுதலியவற்றையுண்டு, நீரைக்குடித்து, உறங்கிக்கிடக்கவில்லையா? ஆகிலும் இவ்வின்பம் கேவலம் காயிகமாகையாலும்; அதி சாமானிய ஜந்துக்களுக்கும் கிடைக்கத்தக்கதாகையாலும்; புத்தியைக்குறியாக உடைய மனிதனுக்கு இதைக்காட்டிலும், வேறுனவும் மேலானவும் பல இன்பங்களுண்டு. இவ்வின்பங்களெல்லாம் பரோபகாரத்தினால் ஜனிக்கின்றன. கேவலம் ஆத்மானுபவத்தையே உடையவனே சுவப்பிரயோஜன பரனென்றும், பாபியென்றும், மிருகப்பிராயனென்றும்; பரோபகாரியை மஹாத்மாவென்றும், புண்ணியசாலியென்றும், சாதாரண பாமரஜனங்கள் கூட நிந்திப்பதையும், புகழ்வதையும், நாம் தினந்தோறும் கேட்கின்றோம். இந்த பரோபகாரம் பலர் விஷயமாயும், பல படித்தாயுமிருக்கும். நாமபெற்றவர் விஷயத்திலும், நமது குடியிற்பிறந்தவரிடத்திலும், ஊரிலுதித்தவரிடத்திலும், நாட்டில் ஜனித்தவரிடத்திலும், மனுஷ்ய சாமானியத்தினிடத்திலும், அவரவர் தகைக்கிசைந்தபடி உபகாரம்செய்யவேண்டியதும்; அந்த உபகாரங்களினால் பலவித ஆநந்தம் ஜனிப்பதும், புத்தியைக்குறிப்பாயுடைய மனிதருக்குமாத்திரம் உரித்தாயிருக்கின்றது. இந்தப் பரோபகாரம் செய்தலேதங்கட்குக் கடமையெனத்தெரிந்தவர்கள் மதித்தபோதிலும்; தெரியாதவரும் அதைப்பரலோகசாதகமென்று நினைத்துச்செய்கின்றார்களல்லவா? இவ்விரண்டும் நேரானகொள்கைகளேயாம். ஏனெனில், ஒருவன் வஞ்சனையின்றி தன்கடமையேச செலுத்திவிடுவானுகில், அவனுக்குப் பரலோகப் பிரயோசனமும் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. காயிகமான இன்பங்கள் காயத்துடன் முடிந்துவிடிலும்; ஆத்மசம்மந்தமான இன்பம், ஆத்மாவைத் தொடர்ந்து மறுமையிலும் செல்லுமென்றும்; அந்த மறுமை யின்பத்துக்கு ஹேசனையாக இம்மையிலும் பரோபகார ஜனிய ஆநந்தத்தைக் கடவுளளித்திருக்கிறுனென்றும், சகலராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விருவகையின்பத்திற்கும் இவ்வித சாம்மியமிருக்கினும், அவற்றிலுள்ள பேதத்தையும் சற்று கவனிக்கவேண்டியது. இம்மைசுகம் தேட்டிப்போகும்; மறுமைச்சுகமத்தன்மையான தன்று. விசேஷமாய் மதுர பதார்த்த முண்பவருக்கு நாக்கு இலேத்துப் போய், மறுசுவை யுண்ணவே

ண்டி யிருத்தலே இம்மைச் சுகத்தின் சுவரூபத்துக்கு திருஷ்டாந்தமாகும். கடைசியாகசுகானுபவத்துக்கு தக்கஞ்ஞானம் அத்தியாவசியகம். நிழலின் அருமையை வெயிலில் அலேந்தோனும்; உணவின் மஹிமையைப் பசியில் வருந்தியவனும் அறிவதுபோல், அரண்மனையிலுறங்கி, பசியைக்கண்டறியாதவன், எவ்வளவும் அறியமாட்டான். இதுபற்றிதான் வறியோரைக்காட்டிலும், ஞானமற்ற செல்வர்களிடத்தில் விசேஷ கிரவுரியமும், கொடுமையுமிருக்கின்றன. இதினுல் சுகத்தைச் சம்பாதிப்பதற்குமாத்திரமேயன்றி, அதை அனுபவித்தலுக்கும் ஞானம் அத்தியாவசியகமென்று வற்பகிறபடியால், அந்தஞ்ஞானலம்பாதனமார்க்கத்தையும் உபாயங்களையும் குறித்து விசாரிக்க வேண்டியதாகிறது. அதையிப்பத்திரிக்கையிற் சொல்லி முடியாதாகையால், வருகிற பத்திரிக்கையில் விசாரிப்போம்.

பெண்களுக்குக்கல்வி.

பெண்களுடைய மடமையானது நமது நல்லறிவுக்கும் நன்னெறிக்குந் தடையாயிருப்பது போலவே நமது செல்வத்தையுஞ்செழிப்பையுங் குன்றச்செய்கின்றது. இக்குறை மூன்று விதங்களால் நேரிடலாம். முதலாவது, பெண்கள் தமதுசாமர்த்தியத்தையொரு தொழிலின்றி சோம்பலிற்செலுத்துவதாலும்; உ-வது. தமதுபுருஷருடைய சமயத்தை வீணுக வூக்கிரமிப் பதிலுலும்; ங-வது. தமதுபுருஷருடைய திரவியத்தை வீண்செலவு செய்வதிலுலுமே.

இம்மூன்றனுள் முதன்மையைப் பற்றி இங்கு விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லே. நமது தேசத்துப் பெண்கள் கற்றுணர்ந்து உசிதமான தொழிலில் பிரவேசிக்காமையால் உண்டாகும் வறுமையைப் பற்றியும், தீமையைப் பற்றியும் முன்பே போதுமானஅளவுவாதித்திருக்கிறோம். அன்றியும் ஒருதேசத்து நன்மையாவது தீமையாவது அத்தேசத்தில்வாழும்ஒவ்வொரு அற்பப்பிராணியாலும் அதிகரிக்குமென்பதை இங்குசற்றுக்கூறவேண்டியதாயிருக்கின்றது. நாட்டுக்குநல்லதுரைவந்தாலும்தோட்டிக்குப்புல் சுமக்கிறதுதானேதொழிலென்று,தமதுஅந்தஸ்தின் தாழ்மையை யோசித்துப்பலர்மேலானகாரியங்களில்பிரவேசியாமலிருப்பதுவழக்கமே. ஆயினுஞ்சற்றுயோசிப்போமாயின்,அணுவேயாயினும் ஆபத்துக் குதவும், காய்ந்த வெற்றிலையுங் கைவிடப்படாது என்கிற, பழமொழிகளின்படி நாம் அற்பமென்று நினைக்கிற ஒவ்வொன்றிற்கும் நக்கபயனுண்டென்பதை அறியலாம். ஆதலால் பெண்கள் விசேஷமாகச் சம்பாதிக்கத் திறமையற்றவராயினும் அவர்களது சொல்பசம்பாத்திய மும் தேசபொது நிதியைஅதிகப் படுத்தலாமல்லவா? மேலுமொரு தேசத்துப்பொதுநிதியாதென்று விசாரிக்குமளவில், மிதமாகிய சிலர்சம்பாத்தியமேயன்றிஅமிதமாகியசிலர்சம்பாத்தியமென்றெனவறியலாம். எந்தத்திரவியமானதுபலரிடத்துஞ்சென்றுபலருக்கும்பயன்பட்டு மீண்டும் மீண்டும் நேர் உருளேபோல் திரும்பி வருகின்றதோ அதைமாத்திரமே தேசபொது நிதியென்று சொல்லலாகுமேயன்றி, ஓரிடத்துக்கு வந்து மண்ணுக்கிரையாகி மாளாக்கிடக் கின்றதனத்தை தேசநிதியென சொல்தலக் கூடாதல்லவா? சிலதிரவியவான்களிடத்து அமிதமாகசேர்ந்திருக்கும் பணம் அவர்களாலும் அனுபவிக்கப்படாமல்பிறருக்கும்பயன்படாதுமண்ணெடுமண்ணுகின்றது.சிற்றளவாகப்பலர்சம்பாதிக்குந்திரவியமோவெனில், அவர்கள்கையில்தங்காமல்நாடெங்குமோடிப்பலருக்குப் பயன்படும். இதை ஓரிடத்தில்தானே நிருத்தங்கூடாது. தமது அத்தியாவசியக மானபல அவசர நிமித்தஞ் செலவு செய்ய வேண்டியதே யிருக்கிறது. ஒரு விதத்தில் செலவாகிற பணம் மீண்டும் மற்றொருவிதத்தில் வந்து சேருகின்றது. இவ்வாறு சென்று திரிந்து வருகிறதனமே தேசத்துக்குப் பொதுப்பட பயன் படுகிறதென்று அர்த்தசாஸ்திரிகளும் ஒப்புக்கொள்வார்கள். ஆதலின் பெண்களுடைய அற்ப சம்பாத்தியம் அமிதமாகக்குவிக்கப்படுந் திரவியத்தைப்பார்கிலும் நாட்டுக்கு அதிகசிறப்பையுண்டாக்கு மென்பதற்குச் சந்தேகமில்லே. அவர்களுடைய மடமையால் இச்சிறப்பெல்லாம் அற்றுப்போய் விடுகிறதென்பதும் விசிதமே. இதுவன்றி ஒருநாட்டுக்கு உண்மையானநிதியென்று சொல்லத்தக்கது அந்நாட்டிலுள்ள பொன்னும் வெள்ளியுமே யல்ல, அந்நாட்டின் செழிப்புக்கு மூலாதரமான வரத்தகமே மென்மேலும் பெருக்கி விருத்தி செய்யக்கூடியகற்றறிவே பெருஞ் செல்வ மாகும். யுக்தியோடுஞ் சரீரப்பிரயாசை யோடும் அலேச்சலுக்குப்பின் வாங்காமல் முயற்சி செய்யுந் தீரமுடைய ஒவ்வொருபிராணியும், அதேகமடங்கு பொன் வெள்ளியினும் அதிகமாய் மதிக்கப்படவேண்டும். இம்முயற்சியில்லாமல் எவ்வளவு திரவிய மிருந்தாலும்

தேசத்துக்குச் செழிப்புஞ் சிறப்பு முண்டாகாது. மேலும் ஜனங்கள் விசேஷதிரவியஞ் சேருமிடத்து மெய்ம்முயற்சிமறந்து நாளாவட்டத்தில் க்ஷீணித்து வருமையடைகின்றனர் என்பதற்குச் சரித்திரத்தில் அநேக உதாரணங்களுண்டு. ஐரோப்பா கண்டத்திலுள்ள இஸ்பானியதேசத்தார் அமெரிகா கண்டத்தை முதன்மையாகக்கண்டுபிடித்துத் தமது ஸ்வாதினமாக்கிக் கொண்டு அங்கிருந்து அளவற்ற பொன்னும் வெள்ளியும் கப்பல்கப்பலாகவாரிவந்தும், அவர்கள் ஒரு பொழுதாவது தமது செல்வத்தினால் சிறப்படையவில்லை. அச்செல்வத்தினால் வீனரும் சோம்பருமாகி க்ஷீணதசையடைந்தனர். ஆதலால் நாட்டுக்குப்பெருஞ் செல்வம் கல்லறிவும் நன்முயற்சியுமே. மேலும் நமது பெண்கள் கல்லறிவிலும் நன்முயற்சியிலும் அபிவிர்த்தியடைவதற்கு அவர்களுடைய மடமைபெருந்தடையாயிருத்தலால், அம்மடமையாலும் நமதுநாடு செல்வத்தினாலுஞ் செழிப்பிலுங் குன்றிப்போகிறதல்லவா?

இரண்டாவது, பெண்கள் தமது மடமையால் புருஷருடைய சமயத்தை வீணாகக் கிரமிக்கின்றனர். பெண்கள் கல்லாதமூடராய் இருத்தப்பால், அவர்களது கற்புக்கழிவுவராமல் காத்தலாகிய கவலையும், அவர்களால் பெரும்பாலும் முடியாத கிரஹகிருத்தியவிசாரணைசெய்தலுமாகிய இரண்டுதொழிலீனுய்புருஷர்தாம்மேல்போட்டுக்கொண்டு லாபகரமான இதரகாரியங்களில் பிரவேசிக்கவன்மை குறைந்தவராகின்றனர்.

இங்கிலாண்டு முதலிய பல தேசங்களில் புருஷர்தமது பெண்டு பிள்ளைகளினின்றும் பலவருஷம் பிரிந்து தூர தேசங்களுக்குக் கப்பல்யாத்திரைசெய்து திரவியஞ்சம்பாதிப்பார்கள். இன்னூட்டில் ஒருவன்தன் மனைவியைவிட்டு இரண்டொருமாதம் பிரிந்திருந்தாலுதானும் பொருக்கமாட்டான, பிறரும் பொருக்கமாட்டார்கள். இதற்குக்காரணம் யாதென்றுஆழமாகவிசாரிப்போமாயின், நமதுபெண்களிடத்துநமக்குண்டாயிருக்கும் அவநம்பிக்கையே முக்கியமானதாக தோன்றும். சம்சாரத்தைத் தனியேவிட்டு வெகுகாலம் வெளியில்போயிருப்பது நலமன்றென நம்மவர் எல்லோரும் ஒப்புக்கொள்வார். திரைகடலோடியுந் திரவியந்தேடென அவ்வையுரைத்திருக்கினும், சம்ஸாரபாதையாலன்றே வீட்டைவிட்டு அசைய வொண்ணாது காலில் விலங்கு பூட்டியிருப்பதுபோல்வாளக்கிடக்கின்றோம். அங்கிலேயருக்குள் இவ்வித நிர்பந்தங்கள் இல்லாமலிருப்பது அவர்களுடைய பெண்களின் விசேஷதேர்ச்சியாலும், கல்வியாலும், நிறையிலுமன்று. அவர்கள் தமது பெண்களுடைய நேர்மையையும் கற்பையும் விசேஷமாகக்கவனிக்கிறதில்லையென்று சிலர் சொல்லத்துணிவார்கள். ஆயினும் இதுசுத்தப் பிசகு என்று சொல்லச்சற்றும் சந்தேகிக்க மாட்டோம். மனிதருடைய சுபாவம் எவ்விடத்தும் ஒன்றுகவே இருக்கின்றது. இவர்களுடைய சரித்திரத்தையும் நடத்தையையுஞ் சற்று உற்றுப்பார்ப்போமாயின், இவர்களுக்குள் பதிவிரதாபங்கம் எல்லாற்றினும் பெருங்கேடாக எண்ணப்படுவது மன்றி இம்மானக்கேட்டைச் சகிக்கமாட்டாமல் உயிர்விடத்துணிகின்றனர் எனவிளங்கும். அவர்களுடைய பெண்கள் பேதமின்றி ஆடவருடன் கலந்து நடிப்பதினால் நாம் அவர்களுடையசன்மார்க்கங்களைப்பற்றித்தாழ்வாகநினைப்பதுஅனியாயம். உள்ளபடிஅவர்களுடைய பெண்கள் நமது பெண்களைப் பார்கிலும் அதிகநல் லொழுக்கமும்நேர்மையுமுள்ளவ ரென்பது பிரத்தியக்ஷ அனுபவத்தால் ஸ்தாபிக்கப் படுகின்றது. இது உண்மையல் லவென்றாலும் நமதுபெண்களைநாம் அவ்வளவுநம்புகிறதில்லை யென்பது மாத்திரம் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதே. கவலையெல்லாவற் றுள்ளும் இதுமாககொடியவென்பதற்கு அவரவர் அனுபவமேசாக்ஷி.

"புகழ்புரிந்தில்லிலோர்க் கில்லையிகழ்
வார்முன், னேறுபோற்பீடுநடை."

என நாயனார் சொல்லியவாறு நமது ஆண்மையும் புகழ்ச்சியும் சிறப்பும் நீக்கக்கூடிய பெண்களுடைய மாட்சிமையைக் காத்துக் கொள்வது நமக்கு எல்லாவற் றிலும் பெருங் கடமையாகின்றது. இக் கடமைசெலுத் தாத்தினாலொரு பழிநேரிடுமாயின் பிறகு குபேரசம்பத் தினாலும் நமது வாழ்க்கைமேன் மாடையாது. ஆதலால் பொருள்தேடுவதைப் பார்கிலும் நமது பெண்மாட்சிமைக்காப்பது உசிதமென்றே கொள்ளுவோம். ஆயினும் இம்மாட்சிமை எவ்வாறு காக்கக் கூடுமென்பதையுஞ் சற்று யோசிக்க வேண்டும். ஆபாதபரியந்தம் ஆடையால் மூடி, அறைவீடு விட்டு அகலாதுகாக்கின்ற மகம்மதியர் மதிமோசம் போவதுபோல்மற்றவர்கள்சகிப்பதில்லையென்பது லோகப்பிரசித்தம். மகம்மதியர்வாழும் என்னூட்டிலும் சன்மார்க்கத்தைப்பார்கிலுந் துன்மார்க்கமே அதிகமாயிருக்குமென்பதைச் சரித்திர பூர்வகமாயறியலாம். சிறையால் காக்கத் துணிவதை விடவீண் முயர்சிவேருண்டோ. இச்சிறையேநாம் கருதியகாரியத்தைத்தவிர்க்க ஹேதுவாகின்றது. நாம் யாதாமொருவஸ்துவைஅபரூபமானதாகமென்மே

லும் மறைத் துவைச்சுமளவும் அதனிடத்துப்பிறருக்கு விசேஷப் பிரமையுண்டாகிறது. கல்வியும் நாகரீகமும் அதிகரித்த அங்கிலேயமுதலியநாடுகளில், பெண்கள் பேதமின்றி வெளியிலுலாவத் திரிவதினால், "பழக்கத்தினால் பாயசமுங்கூழாம்" என்பதுபோல் அவர்களுடைய அழகியதன்மை அபரூபமாயிராது, சாதாரணமாகிஆடவருக்குஅவ்வளவு பிரமையுண்டாக்குகிறதில்லை. கோஷாவஹிக்கும் நாடுகளில் ஆடவர்பெண்ணிற் சிறந்த பேரழகைக் காண்பது அபரூபமாயிருத்தலால், கண்டது கையளவு காணாதது கடலளவுஎனதாம். அபரூபமாய் காண்பதைப் பற்றியும், தமது கண்களுக்குப் புலப்படாததைப் பற்றியும் பிரமித்து மேன்மேலும் மோகங் கொள்ளுவார்கள். இதுநிற்கபெண்கள் சிறையிலிடப் படுவாராயின், தமது நிர்பந்தத்துக்குக் காரணமாகிய கற்ப்பினிடத்து மனச்சலிப்புக் கொள்வார்கள். மேலும் உலகத்தில்தாம் காணுதகாட்சி எவ்வளவோ எத்தன்மையவோ வெனமாமோகங் கொண்டு தமது சிறையினின்றும் தம்மை மீட்டுக்கொள்ளும் வகைதேடுவார்கள். அபரூபமாகக் கிடைக்குஞ் சமையும் அநர்த்தத்தைவிளைக்கிலாமென்பது சகஜம். ஆதலின் புருஷன்நோகாதின்றுபெண்மாட்சியைகாக்க விரும்புவது மடமையே, ஆதலினுலன்ரே அழகிய சொற்களால் அறிவோடு நாயனார்,

"சிறைகாக்குங்காப்பெவன்செய்யுமகளிற், நிறைகாக்குங் காப்பேதலை."

என வருளியது. பெண்கள் தமது சொந்தஅறிவை விருத்திசெய்து நன்மை தீமைகளையறிந்து பழிபாவத்துக் கஞ்சிமாட்சிமையான வழியில் நிற்பதே சாதகமான நோம்பேயன்றி மற்றநோம்பெல்லாம் வீணுகவே முடியும். ஆதலால் அவர்களுக்குக்கல்விப் பயிற்சிசெய்வித்து நல்லொழுக்கத் தையூட்டி நன்னெறிகளைப் போதிதுக் கூடுமான வரையில் நல்லஸ்திதியி லிருத்துவதே எமமாலாக வேண்டியகாரியம். வேறிவிதத்தில் அவர்களைக்காக்கமுயல்வது மண்குடத்துக்கு இருப்பப் பூண்கட்டுவது போலும். இச்சிறந்த கல்விக் காப்பு எமது பெண்களுக்கில் லாமையினுலன்ரே யாம் விசேஷகவலையற்று சமயமற்று, தூதேசவர்த்தகஞ் செய்து நமதுதேசம் செல்வத்தால் செழிக்கசெய்யத் தாணியற் றவர்களாயிருக்கின்ரோம்.

நமதுநற்சமயத்தை நமது பெண்கள் மற்ரொரு விதத்திலும் ஆக்கிரமிக் கின்றனர். நமது கிரஹஸ்திருத்திய விசாரணைபெரும்பாலு நமது பெண்களைச் சேராமல், நமதுதலைமேல் விழுந்து நம்மைவிடாது வருத்துகின்றது. அர்த்தாஜியத்தின் பொருட்டு வெய்யலில்திரிந்து கைகால் ஓய்ந்து களைப்போடு வருந்தி புருஷன் வீட்டுக்கு வரவே அவளை முகமலர்ச்சியோடு நல்வார்த்தைபேசி புண்டிமுதலிய வற்றுல் உபசரிக்காமல், அரிசியில்லை, பருப்பில்லை, புளியில்லை, உப்பில்லை, காயில்லை, கறியில்லை, என அவன்மனைவி வலிய வசனங்களைக் கூறுவாளாயின் அவன் ஊக்கமழிந்து மிகுந்த வருத்த மடைவானல்லவா? இவ்வித தொல்லையினுல்தான் பெரியோர்ஸம்ஸாரத்தை துக்கசாகரத்துக் கொப்பிடிருக்கின்றனர். நமது பெண்கள் அறிவிற் சிறந்தவராயின் நமது சம்பாத்தியத்துக்குத் தக்கபடிவீட்டுச்செலவுக்கு வேண்டிய சகலசாமக்கிரிகளுந்தாமேசேகரித்துப் புருஷனுக்கு யாதொரு வருத்தந் தோன்ரு மல் உபாயமாக சகலகிரஹகிருத்தியங்களையும் நடாத்தி உபசரிக்கமாட்டார்களா? இவ்வாறு அவர்களுடைய நல்லுதவியால் ஸம்சாரந்துக்கலாகரமாகாமல்சந்தோஷகரமாகாதோ? இதுநிற்கஇப்பெருந்தொல்லையால் சமயமற்று வேறுகாரியங்களில் நாம்பிரவேசிக்கமாட்டாமையால் நமது தேசச்செல்வத்துக்குஞ் செழிப்புகுங் குறைவு நேரிடுமென்பதையே இங்கு விசேஷமாக கவனிக்கவேண்டும்.

மூன்ரவது. பெண்கள் தமதுவீண் ஆசையினுல் தமது புருஷருடைய செல்வத்தை வீணுக்கி, அவர்களுடைய லாபத்துக்கும் அபிவிர்த்திக்கும் தடையாகின்றனர். நமது பெண்களுக்கு வஸ்திரா பரணத்தின் மீதுள்ள துரபிமானமும் துராசையும் லோகப்பிரசித்தம். ஒருவன் வர்த்தகமுதல் நூறுருபாயானலும், இவன் மனையாள் கையிலும் கழுத்திலுங் காதிலும் இருநூறுரூபாய்நகைபோட்டிருப்பான். இதனுல் வட்டி நஷ்டமாகிற தென்பதைச் சற்றும் யோசியார். இக்கொடியவழக்கத்தால், நமதுதேசத்திலுள்ள திரவியத்தில் மூன்றி லிரண்டு பங்குவர்த்தகத்துக் குதவாமல் வீணேகிடக்கிறது. இதர தேசத்தார் வஸ்திராபரணங்களைத் தரிக்கிறதில்லையோ வெனில், தரிக்கின்றனர். ஆயினும் நமது பெண்களைப்போல் வெள்ளியும் பொன்னும் பருத்தகம்பிகம்பியாகச்செய்து போட்டுக்கொள்ளும் வழக்கம் நமது செல்வத்தின் பயனையரிந்த நாகரிகமுடைய தேசங்களில் கிடையாது. ஒருதேசம் நாகரிகத்தில் விர்த்தியடையுந் தோறும் ரம்மியமான பலவிசித்திர தொழில்களின்மீது விருப்பங்கொள்ளினும் சுமக்கக்கூடாதபொன் வெள்ளியை தேகமெல்லா

ம்பூட்டிக்கொள்ளும் வழக்கம் நாளாவட்டத்தில் குறைந்து மறைகின்றது. இவ்விஷயத்தில் நமது பெண்களுக்குள்ள அபிமானம், அவர்களிடத்தே நிற்காமல் ஆடவரையும் பற்றுகின்றது. அநேக ஆடவர்களும் பாளம்பாளமாய் பொன்காப்புகளையும் பொன்சரப்பளிகளையும் தட்டி பொட்டுக் கொள்வதை எங்கும் பார்க்கலாம். இது அழகின் பொருட்டோ அலங்காரத்தின்பொருட்டோ வெனில் இரண்டுமல்ல. பெரும்பாலும் அப்பொன் வெள்ளியின் விலையின் பொருட்டே நாகரீகமுள்ள தேசத்தார்பூணும் ஆபரணங்களுக்கும் நாகரிகமில்லாத தேசத்தார் பூணும் ஆபரணங்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை விசாரிக்குமளவில், முன்கூறிய ரவ அவைகளில் அடங்கி யிருக்கும் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் அதிக விலையுள்ளனவாயிரா. பின்கூறியவையோ உலோகத்திலும் அற்பவிலையுள்ள வாயினும் வேலைப்பாபட்டினால் அதிகவிலையுள்ளவாகும். நமது தேசத்தார் செய்விக்கும் ஆபரணங்களின் தன்மை விசேஷமாக முன் சொல்லியதையொக்கும். யாதொரு ஆபரணமும் கூடுமானவரையில் அழித்தால் அதற்காகச்செலவழித்தபொருளுக்குச் சேதம் வராமலிருக்கும்படி வகை தேடுகிறார்கள். இதனால் நமக்கு லாபமுண்டாமேயன்றி நஷ்டமில்லையெனச்சிலர் நினைக்கலாம். ஆயினும் இது பிசகு. பொன் வெள்ளியை மொத்தாகாரமாகத் தட்டிச் சுமப்பதினால் ஒருவருக்கும் லாபமில்லை. அதன்விலை முதலுக்குள்ள வட்டியும் லாபமும் நஷ்டமாய் விடுகிறதேயன்றி வேறுபயனில்லை. பின்சொல்லிய வேலைபபாடுள்ள ஆபரணங்களால், பலருக்கு உயர்ந்த கூலியால் லாபமுண்டாவதுமன்றி பலவிதகைத்தொழிலும் விருத்தியடையும். இதைவிரிக்கின் விஸ்தாரமாகப்பெருகுமாதலால் அவ்வாருசெய்யா தொழிகின்றனம். இதன் உண்மையை விசாரிக்க இஷ்டமுள்ளவர்கள் அர்த்தசாஸ்திரத்தைக்கொண்டறியலாம்.

இவ்வாறு நமது பெண்களுடைய மடமையால் நமது செல்வமும் செழிப்பும் குறைவுபடுமென்பதை யொருவாறு உணர்த்துனும். இனிவருஞ் சஞ்சிகையில் நமது கௌரவத்துக்கு நேரிடும் தாழ்வைப்பற்றி விசாரிப்போம்.

அதர்வணவேதத்தின் முண்ட கோபநிஷத்து.

முதல் அத்தியாயம்.

சர்வத்துக்கும் கர்த்தாவாயும், ஜகத்துக்கு இரக்ஷகனுயும், தேவர்களுக்குள்ளாகப் பிரும்மா பிரதமராய் உண்டானார். அவர் ஜேஷ்ட புத்திரராகிய அதர்வாவுக்கு ஸர்வவித்தியாதாரமான பிரும்ம வித்தையைச் சொன்னர். பிரும்மா அதர்வாவுக்கு எதைச்சொன்னரோ அதைப்பூர்வத்தில் அதர்வா அங்கிரஸ்ஸுக்குச்சொன்னர்; அவர் பரத்துவாஜ ஸம்பவரான ஸத்தியவஹருக்கு சொன்னர். அந்த பாரத்துவாஜா பரம்பரையாய் (மூலத்தில் பரும்பரும் யென்று கண்டிருக்கிறது. பராபர ரூபமான வித்தையென்று அர்த்தமாகலாம்.)

மஹாசாலராகிய சவுனகர் அங்கிரஸ்ஸுமுன்பாக விதிவத்தாக யிருந்து கொண்டு கேட்டார். ஓ பகவானே! எதைஅறிந்தால் இதெல்லா மறிந்ததாகு மென்று கேட்டார். அதற்கு அவர் உத்தரம் சொன்னர். இரண்டு வித்தையைகளை அறியவேணுமென்று பிரும்மவித்துக்கள் சொல்வார்கள். பரவித்தையென்றும் அபரவித்தை யென்றும், அதில் அபரவித்தை யானது ருக்குவேதம், யெஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம், சிக்ஷை, கல்ப்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ்ஸு, ஜோதிஷம், இதுகள்தான். பின்னும் அந்த அவிஞ்சியானது எதினால் அறியக்கூடுமோ அதுதான் பரவித்தை. அதானது பார்க்கக்கூடாமலும், கிரஹிக்கக் கூடாமலும், கோத்திரமில்லாமலும், வர்ணமில்லாமலும், சக்ஷுஸ்ஸில்லாமலும், சிரோத்திரமில்லாமலும், கை, கால்லில்லாமலும், நித்தியமாயும், வியாபகமாயும், ஸர்வகதமாயும், அதி சூக்ஷுமமாயும், அவிகாரியாயும், இருக்கிறது. இந்த பூதயோனியைத்தான் தீர்கள்பார்க்கிறார்கள். பஞ்சுப்பூசி யெப்படியானல் சிருஷ்டித்துக் கிர்சிக்கிறதோ, எப்படியானல் பிருதிவியில் ஓஷதிகள் உண்டாகிறதோ, எப்படி யானல் ஜீவித்திருக்கிற புருஷனிடத்திலிருந்து கேசங்களும், மயிர்களும், உண்டாகிறதுகளோ, அப்படிதான் அக்ஷரத்திலிருந்து பிரபஞ்ச (பிரும்மம்.) மூண்டாகிறது. தபஸ்ஸுனல் பிரும்மம் ஸங்கிரஹிக்கப்படுகிறது. அதிலிருந்து அன்னமுண்டாகிறது, அன்னத்திலிருந்துபிராணம், மனஸ்ஸு, ஸத்தியம், லோகங்கள் கர்ம்மங்களில் அமிருதமும் (உண்டாகிறதுகள்.) எவன் சர்வக்கியஞ்ஞு, ஸர்வவித்தோ, எவனுடைய தபஸ்ஸானது ஞானமயமாயிருக்கிறதோ, அவனிடத்திலிருந்து இந்தபிரும்மமென்ன, பேரென்ன, ரூபமென்ன, அன்னமென்ன, இதுகள் உண்டாகிறதுகள். இதுஸத்தியம். கவிகள் மந்திரங்களுக்குள் யெந்தெந்த கர்ம்மங்களை ப்பார்த்தார்களோ அதுகளை திரேதாகால

த்தில் வெகுப்பிரகாரமாய் விஸ்தரிக்கப்பட்டதுகள். ஓ, ஸத்தியபலனே அபேக்ஷிக்கிறவர்களே! அதுகளை ஸ்திரமாய் அனுஷ்டியுங்கள். நல்லகாரியத்தினுடைய லோகத்தை அடையவேண்டியதற்கு இதுதான் வழி. அக்கினியை ஜ்வலிப்பிக்கும்பொழுது, காஷ்டியெப்போது அளாவுகிறதோ அப்போது ஆஜ்ஞியபாகங்களுக்கு மத்தியில் ஆகுதிகளை ஸமர்ப்பிக்க வேண்டியது. எவனுடைய அக்கினிஹோத்திரம், தர்சபூர்ணமாஸங்களில்லாமலும், ஆக்ரயணமில்லாமலும், அதிதிகளில்லாமலும், வைச்சுவதேவமில்லாமலும், வீதிப்பிரகாரமில்லாமலுமிருக்குறதோ அவனுக்கு ஏழுவகையில் லோகங்களை அடித்துவிடுகிறது. கராளியென்றும், கரூளியென்றும், மனோஜவாவென்றும், சுலோஹிதாவென்றும், சுதூம்ரவர்ன்னுவென்றும், ஸ்புலிங்கினி யென்றும், விஸ்வருசிதேவியென்றும், இப்படிக்கு அளாவிக்கொண்டு ஏழுஜ்வாக்குகள் இருக்கிறதுகள். இதுகள் பிரகாசிக்கும்போது எவன் அனுஷ்டிக்கிறானோ, அந்தந்த காலத்தில் ஆகுதிகளை கொடுக்கிறானோ அவனை,(இந்த ஆகுதிகள் சூரியரச்மிகளில் ரூபத்தையெடுத்துக்கொண்டு என்றும் அர்த்தமாகும்.) அழைத்துக்கொண்டு தேவர்களுக்கு பதியாகியஒருவன் அதிவஹித்துக்கொண்டிருக்கிறஇடத்தில்சேர்ப்பிக்கிறதுகள். அவனே வா, வா, என்று நல்லவர்ச்சஸ்ஸுகளான ஆகுதிகள் சூரியரச்மிகளுடன்கூட யக்கியம் பண்ணுகிறவனை ப்ரியமான வார்த்தையையும் சொல்லிக்கொண்டு இதுதான் உங்களுக்கு நல்லகாரியத்தினாலுண்டான புண்ணியபிரும்மலோகமென்று ஸேதாததிரம் பண்ணிக்கொண்டு, அழைத்துக்கொண்டு, போகிறதுகள். இந்த கத-விதமான கொறச்சலான கர்ம்மத்தைச் சொல்லியிருக்கிற இந்த எக்கியமென்கிற தொப்பங்கள் அஸ்திரமானதுகளாயிருக்கிறதுகள்.

இதையே ஸுயஜ்ஞ-யென்று எந்தமூடர்கள் ஆநந்தித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் ஜறையையும் மரணத்தையும் மருபடி அடைகிறார்கள்.

அஜ்ஞானத்துநடுவேயிருந்துகொண்டு தாங்களே புத்திமான்கள் பண்டிதர்களென்று யெண்ணிக்கொண்டிருக்கிற மூடர்கள் குருடனால் அழைத்துப்போகப்பட்ட குருடர்கள்போல் துக்கபீடிகளாய் சுத்தி சுத்திவருகிறார்கள். அஜ்ஞானத்தில் நானுப்பிரகாரமாயிருந்துகொண்டும், நியபசங்கள் தாங்கள் சிருதார்த்தர்களானோமென்று யெண்ணுகிறார்கள். ஆகையால் கர்ம்மிகள் அறியாமல் அதினால் துக்கத்தை யடைந்து லோகங்கள் கூனித்து நசிக்கிறார்கள். இஷ்டத்தையும், பூர்த்தத்தையுமே சிரேஷ்டமென்று நினைத்து, மூடர்கள் வேறே ஸ்ரேயஸ்ஸை அறியவில்லை. அவர்கள் ஸ்வர்க்கத்தில் சுகிருதபலனை அனுபவித்து இந்த லோகத்திலாவது இதற்குக்கீழானலோகத்திலாவது வந்து சேருகிறார்கள். அரண்ணியத்தில், பிக்ஷாசரியும் பண்ணிக்கொண்டு சாந்தாளாய்த பஸ்மையும் ஸ்ரஜையையும் எவர்கள் ஆசரிக்கிறார்களோ அந்த வித்துவான்கள் ஸர்வபாபவினிர் முக்தாளாய் அந்த கூஷ்ணதலையும், அவிகார ஸ்வரூபியாயும், யிருக்கிற புருஷனிருக்கிற இடத்தில் சூரியத்துவாரத்தால்ப் போய் சேருகிறார்கள். பிரும்மண கர்ம்மங்களால் சம்பாதித்தலோகங்களை நன்றாய்யோசித்துப்பார்த்துக் கர்மத்தால் அகர்மம் உண்டாகமாட்டாதென்று வியஜனத்தை அடைந்தான்.

அதைஅறியகிறதற்காகக்கையில்சமித்தையெடுத்துக்கொண்டு ப்ரஹ்மத்தில் பரமாஸக்தனாயிருக்கிற வெஷ்ணவனான ஆசாரியன் ஸமகூமத்துக்குப்போகிறான். சமித்துகட்டிக்கொண்டு அதிசாந்தனாய் தன் முன்பாக வந்திருக்கிற அப்பேற்பட்ட (சிஷியனுக்கு) (அந்த ஆசாரியன்) எதினால் அந்த அகடிதமான புருஷனை அறியக்கூடுமோ அந்த ப்ரஹ்மவித்தையை யதாவத்தாய்சொல்லுகிறான்.

பகவத்கீதை.

அ - வது-அத்தியாயம்.

அர்ஜுனன்சொல்.

க. ஹே புருஷோத்தமா! அந்தப்பிரும்மம்யாது, அத்தியாதமமென்பதுயாது, ஆதிபூதமெனப்படுவதுயாது. எது ஆதிதெய்வமென்று சொல்லப்படுவது.

உ. ஹே மதுசம்ஹார! இந்தசரீரத்தில் (பூஜார்கனுகிய) ஆதியக்கிய புருஷன் எவன்? இவ்விஷயத்தை யாவன் எவ்வாறறிய த்தகுந்தவன்? அந்திய காலத்தில் நியமமுடையவரா லெவ்வாறு அறியத்தக்கவனுகின்றனை.

கிருஷ்ணன்சொல்.

ங. நிரதி சயமானப்பிரும்மம் நாசரஹி

தமானது. அதின்ஸ்வபாவமே ஆத்தியாத்ம மென்று சொல்லப்படும். ஸர்வபூதஸ்வரூப ஸ்ஹிருஷ்டிலயங்கள் கர்மமெனகிற பாஞ மத்தையுடையது.

ச. ஹே உத்தமசரீரி! நாச மடையத்த க்கபதுதியே ஆதிபூதம். புருஷனே ஆதிதெ ய்வம். இந்ததேஹத்தில் (அந்தரியாமியாகி ய) நானே ஆதியக்கியன்.

நு. எவன் அந்தியகாலத்தில் என்னையே ஸ்மரிக்கின்றவனுகி சரீரத்தை விடுகின்ரு னே அவன் என்னுடைய (நாசரீரஹிதமான ஆதம) ஸ்வரூபத்தை யடைகின்ரன், இதற் குச்சந்தேகமில்லை.

சு. ஓ குந்திபுத்திரா! எவன் அன்னிய காலத்தில் எந்தெந்த ஸ்வரூபத்தை யுத்தே கித்து ஸ்மரிக்கின்றவனுக சரீரத்தை விடுகி ன்ரனே அவன் எப்பொழுது மந்த ஸ்வ ரூபத்தையே அடைவான்.

எ. ஆகையால் எப்பொழுதும் என்னைச் சிந்திப்பாய். யுத்தஞ்செய்வாய். நீ என்னிட த்து அர்ப்பிதமானமனதையும் புத்தியையும் உடையவனுய் என்னையே அடைவாய், இதற் குச்சந்தேக மில்லை.

அ, ஓ அர்ஜுனனே! முயற்சி யாகிய யோகத்தை யடைந்து வேரொன்றையும் ப ற்ரூது, மனதினுல் திவ்வியமாகிய பரமபுரு ஷத்தை எவன் சிந்திக்கிரனே அவன் அந்த பரமபுருஷத்தையே அடைகிரன்.

க. ஸர்வக்கியனும், புராதனனும், சகல ப்பிரபஞ்சத்தை யாளுவேனும், அணுவினும் அணுவாகிய யாவற்றையும் பரிக்கினறவனும் சிந்திக்கக்கூடாத ஸ்வரூபத்தையுடையவனு ம், அந்தகாரத்தைக் கடந்த சூரியப்பிரகாச னும் ஆகிய, புருஷனே எவன் ஸ்மரிக்கின்ரு னே அவன் (அந்தபுருஷனே யடைகிரன்.)

கo. அந்திய காலத்தில் நிச்சல மான மனதையும், பக்தியையும், யோகபலத்தையு ம் அடைந்து, பிராணவாயுவை புருவமத்தி யப் பிரதேசத்தில் செம்மையாகப் பிரவே சிக்கச்செய்து எவன் அந்தப் புருஷனே ஸ்ம ரிக்கிரனே அவன் அந்தத் திவ்வியபரமபுரு ஷனையே அடைகிரன்.

கக. எதை வேதார்த்தங்களையறிந்தவர் நாசாஹித மானதென்று சொல்லுகிரார்க ளோ, எதைபற்றற்று இந்திரிய நிக்கிரகஞ் செய்த பெரியோர் அடைகின்றனரோ, எ தை (அறிய) விரும்பிப் பிரம்மசாரிகளாகின் ரார்களோ, அந்த பதவியை சங்கிரக மாக உனக்கு விளங்கச் செய்கிறேன்.

கஉ. (பொறிகளாகிய) சகலதுவாரங்க ளையுஞ் செம்மையாகவடைத்து ஹிருதய க மலத்தில் மனதை ஸ்தாபித்து தனது பிரா ணவாயுவை புருவ மத்தியப்பிர தேசத்தில் செலுத்தி (விடாமுயற்சி யாகிய) யோகத் தை யடைந்தவனுகி.

கங. பிரம்மவாசகமாகிய "ஓம்"என்கிற ஏகாக்ஷரத்தை யுச்சரித்து என்னைச் சிந்தித் துக்கொண்டே எவன் இந்தச் சரீரத்தைவி ட்டுப் போகிரனே அவன் உத்கிருஷ்டமா னகதியடைகிரன்.

கச, ஓ பிரத்வீ புத்திரா? எவன் வேறு பற்றில்லாமல் (ஓங்கார வாசகனுகிய) என் னையே எப்பொழுதும் பிரதிதினமும் ஸ்மரி க்கிரனே அந்த நித்தியசமசித்தனுகியயோ கிக்கு நான் சுலபம ாயடையத்தக்கவ னுகி ன்றேன்.

கரு. மஹாத்மாக்கள் என் வழிப் பட்டு உத்தம பதவி யடைந்து துக்கஹேதுவும், அ ஸ்திரமுமான மறுபிறப்பை யடைவ தில்லை.

கசு. ஓ அர்ஜுனு? பிரும்மலோகந்தொ டங்கி சமஸ்த லோகங்களும் புநர் ஜந்மத் தை யடைவிக்கும் என்னை அடைந் தாலோ வேறு பிறப்பு இல்லை.

கள. பிரும்மாவுக்கு ஆயிரயுகங்கள் நா ளென்றும் பின்பாயிர யுகங்கள் இரவென் றும் அறிந்த வர்களே இராப்பக லறிந்த வர்கள்.

கஅ. அந்தப்பகற்காலாரம்பத்தில்அவ்வி யக்தத்திலிருந்தும் எல்லாம் உதபத்தியாகி ன்றன. அந்த இரவுவரும்பொழுது எல்லாம் அந்த அவ்வியக்தத்தில் தானை அடங்குகி ன்றன.

கக. ஓ பிரத்வீபுத்திரா! இவ்வாறுமீண் டும் உண்டாகிற அதே பூதசமூஹங்கள் அந் த இரவு நெருங்கிய சமயத்தில் லயித்து, அ ந்தப்பகல் வரும்பொழுது ஸ்வதந்திரமின்றி ப்பிறக்கின்றன.

உo. அந்த (பிரும்மாவென்றுசொல்லப் படுகிற) அவ்வியக்தத்தைப் பார்க்கிலும் உத் கிருஷ்டமானதும்) வேரனதும், அகோசர மானதும், நித்தியமானதும்ஆகிய, அந்தபர ப்பிரும்மம் ஸர்வ பூதங்களும் அழிந்து போ கையிலும் தான் அழிவதில்லை.

உக. எது இந்திரியத்துக்கு அகோசர மாயும் நாசரஹிதமாயும் உள்ளதோ அதுவே பரமோத்தம பதவி என்னப் படுகின்றது. எந்தபதத்தை யடைந்து பின்பு மறு பிறப்ப டையார்களோ அதுவேயென் பரமபதம்.

உஉ. ஓ பிரத்வீ புத்திரா? எவனிடத்து ஸர்வபூதங்களும் தங்குகின்றனவோ, எவன் ஸர்வ பூதங்களிலும் வியாபித் திருக்கின்ரு னை, அந்த புருஷோத்தமன் வேறுபற்றில் லாதபக்தி யுடையவர்களால் அடையப்படு கிரன்,

உங. ஓ பரத ஸ்ரேஷ்டனே? எப்பொ ழுதா னால் யோகிகள் மறணமடைந்தால்

புநர் ஜந்மமடைவார்களோ, எப்பொழுதாலுல் புநர் ஜந்மம் அற்றுப் போவார்களோ, அந்த காலத்தை (பரிபக்குவகாலம்) சொல்லுகிறேன்.

உச. நெருப்பு, தேஜஸ், பகல், சுக்கில பக்ஷம், உத்தராயணம் ஆகிய (ஞான) வழிகளில் செல்லும் பிரும்மக்கியானிகள் கிரமமாக பிரும்மத்தை யடைகின்றனர்.

உரு. புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், ஆகிய (என்றுல் ஒளி குறைந்த அஞ்ஞான மார்க்கம்) வழிகளில் செல்லுகிற யோகி சந்திரபிரகாசமாகிய (என்றுல் பொய்யான) ஒளியடைந்து மீண்டும் பிறக்குறுன்.

உசு. வெண்மை, கருமை, என்னுமிந்த (ஞான அஞ்ஞான மாகிய) இரண்டு வழிகளும் உலகத்துக்கு சாஸ்வதமாயும், ஸம்மதமாயு மிருக்கின்றன. ஒன்றினுல் (ஞானமார்க்கத்தால்) பிறப்பற்ற (மோக்ஷ) பதவியும், மற்றொன்றினுல் (அஞ்ஞானவழியினுல்) மறுபிறப்பையும் அடைகிறுன்.

ருக்குவேத சம்ஹிதை.

முதலாவது அஷ்டகம்.
முதலாவது அத்தியாயம்.
க-வது அனுவாகம்.

க-வது சூக்தம்.

மண்டலம், க.

[மூதல் சூக்தத்துக்கு தேவதை அக்கினி; ருஷியானவர் விசுவாமித்திரர் பிள்ளைமதுச்சந்தஸ் என்பவர்; சந்தஸ், அதாவது பா, காயத்திரியென்பதாம்.]

வர்க்கம், க.

க. யக்கியத்துக்குப் புரோஹிதனும் *, தேவனும் †, வேதாவென்னும் ருத்விக்கும்*, ரக்தனங்களை †, தரிப்பிக்கிறவருமாகிய, அக்கினியை ஸ்துதிக்கிறேன்.

உ. அக்கினியானவர் பழைய ‡ ருஷிக்களாலும், புதுமையானவர்களாலும் §, புகழத்தக்கவர். அவர் தேவர்களை இங்கே கொண்டுவரக் கடவது.

ரு. அக்கினியினுலே நாள்தோறும் வளர்ந்து கொண்டேயிருக்கிறவும், புகழ் பொருந்தியவும் ¶, வீர்களோடு கூடியவுமாகிய || திரவியத்தை (யஜமானன்) அடைகிறுன்.

ச. ஒ அக்கினியே, நீர் ஹிம்ஸையில்லாத | எந்த யக்கியத்தை எல்லா திக்குக

[ரூபிநவ யேஷ்டோ வெஷ்வாதி தூ-மாயதாமஹூ, ரூபிஜெஷ்வதா.]

(க.) ரூபிஜீஜெ வாரொஹிதம்,

யஜ்ஞஸ்ய தேவமிருத்விஜம், ஹோதாரம்ரத்னதமாதமம்.

(உ.) ரூபிர்வெஷ்வெ-ஹி ஜ்யஹிஷீ
வெர்யா நஷ்டகமெநாஷ்ட, ஸதெவா
நீம்வனஹவக்ஷதி.

(ரு.) ரூபிர்நாராயிஷ்டுவஸு வொஷி
ஜெவஜிவெஜிவெ, யஷ்டாஸம்வீரவத்தமம்.

(ச.) ரூபெஷயம்யஜ்ஞஸ்யாரம்விஷ்வதஃ

* யாகத்தில் யெஜமானனிடத்தில் தக்ஷிணைவாங்கிக்கொண்டு, அதற்குரிய ஹோமம் முதலான தொழில்களை நடத்துகிறவர்களுக்கு 'ருத்விக்கு' என்றபேர் அவர்கள் 'அக்கினீத்திரர்' 'ஹோதா' 'பிரம்மா' முதலாகியவெவ்வேறு பெயர்களையுடைய சகு பேர்கள். தேவர்களுடைய யாகங்களில் அக்கினி ஹோதாவாயிருப்பவர். ஹோதாசப்தத்துக்கு, அழைக்கிறவர்என்றும்; ஹோமம் பண்ணுகிறவர், என்றும் அர்த்தமாகும்.

† யாகப்பயனுகியரத்தனம்.

‡ பிருகு, அங்கிரஸ். முதலானவர்கள்.

§ நூதனமானவர்களாகியஎங்களாலும்.

¶ கொடைமுதலாகியபுகழ்.

|| மக்கள் சேவகர் முதலான வீரர்.

| அக்கினியினுல் நாலண்டையும் காக்கப்படுகிறயாகம் ராக்ஷசர் முதலியவர்களால் ஹிம்சிக்கப்படாது.

விலும்* அடைந்திருக்கிறீரோ அதுதான் தேவர்களிடத்துக்குப் போகிறது.

ரு. வேறு தாவும், கியானமடைந்தவரும்† சத்தியமானவரும், மிகவும் பலவிதமானபுகழ்கூடியவருமாகிய, அக்கினிக்கடவுளானவர் தேவர்களோடுவரக்கடவது.

வர்க்கம், உ.

கூ. ஓ அக்கினியே, (யஜமானனுகிய வறிசு) கொடுக்கிறவனுக்கு நீர்எந்த சுபத்தைப் பண்ணுகிறீரோ அதுஉமதே‡. வேற அங்கிரஸே§ (இது) சத்தியம்.

வரிஹ-ஞவி,ஸஉஷெவஷ-மஹதி

(ரு.) கூழிஹெ-ஊதாகவிகூத-ஃ, ஸதஃழ்ரித்ஸ்ரவஹஃ,ஷெவொஷெவெ ஹிஏாமஉகூ.

(கூ.) யஜ்ஃமஹா ஸ-ஷெகூ உமெஹ ஹஉ்ஃகரிஷ்ஏவிதவெதத்ஸதஏஃம்ரிஸ்ஃ

* யாகத்தில் கிழக்கு முதலாகியநாலுதிக்கிலும், ஆஹவனீயம் மார்ஜலீயம், சாஹபத்தியம், அக்கினீத்ரீயம் என்ற நாலிடங்களில் தீ யெரிவது வழக்கம்.

† மூலத்தில் 'கவிக்கிறது' என்பதில் கவி = கிராந்த, அடையப்பட்ட; க்ரது = கியானம், அல்லது கருமம்.

‡ யஜமானன் செல்வமடைந்தால் இன்னும் விசேஷமாய் யாகம் பண்ணி அக்கினிக்கு திருப்தி செய்விப்பான்.

§ யாஸ்கா என்பவரால் செய்யப்பட்ட 'நிருக்தம்' என்னும் கிரந்தத்தில் அங்கிரஸ் சப்தத்துக்கு 'அங்கார' அதாவது 'தணல்' என்று அர்த்தம் சொல்லியிருக்கிறது. ஆரூல் சுருதி, ஸ்மிருதி, புராணம் முதலானவைகளில் அங்கிரஸ் என்பது ஒரு பழமையானமுனிவருடையபெயராகவழங்குகிறது. மேலும் மகாபாரதம் ஆரணியபருவத்தில் மார்க்கண்டேயரைப்பார்த்து தர்மராஜாவானவர், அங்கிரஸ் எப்படி அக்கினியாஞர் என்றுகேட்க. முற்காலத்தில் அக்கினியானவர் தபசுக்குப்போனபோது அங்கிரஸ்முனி அவர்தொழிலைதான் ஒப்புக்கொண்டு நடத்திவந்தாகவும், மறுபடி அத்தொழிலை ஒப்புக்கொள்ளும்படி அக்கினியை சம்மதப்படுத்தும்போதுதான் அவர் பிள்ளையாகிவிட்டதாகவும், மார்க்கண்டேயர் சொல்லுகிறார். ஆகையினாலேதான் அவருடைய சந்ததியார் அக்கினியினுடைய சந்தியானென்றும், அக்கினியென்றும் சொல்லப்படுகிறார்கள்.

எ. ஓ அக்கினியே, நாங்கள் நாள்தோறும், ராவும் பகலும், புத்தியினாலே வந்தனம் செய்துகொண்டு, உம்மை நெருங்குகிறோம்.

அ. பிரகாசித்துக் கொண்டிருக்கிறவரும், யாகங்களை காக்கிறவரும், சத்தியத்தை பிரகாசப் படுத்துகிறவருமாகிய (உம்முடைய) சொந்தவீட்டில்* வளர்கின்ற (உம்மை நெருங்குகிறோம்.)

கூ. அப்பேர்ப்பட்ட, அக்கினியே, புத்திரனுக்கு பிதாவைப்போல நமக்கு சுலபராயிரும; நம்முடைய க்ஷேமத்துக்காக நம்மோடுகூட இரும்.

உ-வது சூக்தம்.

[இதற்கு ருஷிமதுச்சந்தஸ்; பா, காயத்திரி. இதில் அடங்கிய கூ-ருக்குகளில் மூன்றுக்கு தேவதை வாயு, மூன்றுக்கு இந்திரனும் வாயுவும், மற்றமூன்றுக்கு மித்திரனும் வருணனும்.]

வர்க்கம், கூ.

ஓ வாயுவே, பார்க்கத்தகுதியானவரே வாரும் இந்தஸோமங்களர்† (பிழிந்து) ஆ,

---

(எ.) உவகூாழெஹிவெஹிவெ, ஷொஷா வஸ்யியாவயா, நஹோ ஹூதெவஊஹி.

(அ.) ஈஜதே உவூாணாம் மொவாஇ்ரஏவூதீஹிவிம், வயூஸோநம் விஷ்வஉதெ.

(கூ.) ஸநிம் விதெவஸ-ஞநவெழெவ-ஞ வாயநொஹவ, ஸவ-ஊஷ்வஸ்வஃவ்வயெ.

[ஷி, வ்ரஷ்ட-, இந்த உ-ம். ஷிவாயொநவ, வாயவெவ்ஒ வாயவஸெத்ரவூ-ணாவ்ஹி வாஃ.]

(க.) வாயவாயாஹி ஸூ-தெதெஃ

* எக்கியசாலையில் ஹவிஸ்ஸால் விர்த்தியடைகிறது.

† லோமம்என்பது ஒருவிதமான கொடி. அதின்பால்போன்ற மிருதியானசாறுசா

யத்தம் பண்ணப் பட்டிருக்கின்றன. அவைகளில் (உம்முடையபாகத்தை குடியும். (நம்முடைய) அழைத்தலைக் கேளும்.

௨. வாயுவே, யாகமறிந்தோரும்* அபிஷுதமான† ஸோமத்தை உடையவருமாகிய ஸ்துதிப்போர் உம்மை உத்தங்களால்‡ ஸ்துதிக்கிறார்கள்.

௩. வாயுவே ஸோமத்தை மிகவும் தழுவுகின்றதும்§, அனேகரிடத்துக்கு போகின்றதுமாகிய உம்முடைய வாகனது, ஸோமபானத்தின் பொருட்டு(எஜமானனுகிய) கொடுக்கிறவரிடத்தில் செல்லுகின்றது¶.

லொஸ சுஊஂகூதாஃ, தெஷாஂவாஹிஸ்ரு யீஹவஂ.

(உ.) வாய உதெஜ்ஹிஜுஊதெஜ்வா ஊஜாஸிதாஃ, ஸுதமொஸ சுஹவிஷுஃ.

(ங.) வாயொதவ வ்ரவ்யஂஸநி, யெநாஜிமாதி ஊஷுஷெ, உஷுவிவொஸ உவீதயெ.

ந்தகுணமும் கொஞ்சம் புளிப்பான ருசியும் உள்ளது. அதை புளிக்கவைத்து போதையுண்டுபண்ணும் குணம்வந்த பின்பு தான் அதையாகத்தில் உபயோகிக்கிற வழக்கமென்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிஇவ்வாக்கியத்துக்கு ஆதாரம் இந்த வேதத்தில் பலவிடத்தில் அகப்படும். பார்சிகள்ஸோமம் என்றுசொல்லுகிற மூலிகை இதுதான். ஆனால் அவர்கள் அது இந்தியாவில் அகப்படமாட்டாதென்று பாரசீகத்திலிருந்து வருவிக்கிறார்கள்.

* மூலத்தில் அகஸ் அறிந்தோர் என்று இருக்கிறது. அகஸ்என்றால் பகல் அல்லது நாள். ஆனால் வைதிக பரிபாஷையில் ஒருநாளில் முடிக்கத்தக்க அக்கினிஷ்டோமம் முதலிய யாகங்களும் அகஸ் என்னப்படும்.

† அக்கினிஷ்டோமத்தில் ஸோமத்தின் சாற்றை பிழியும் கிரியைக்கு அபிஷவம் என்றுபெயர். அக்கிரியையின்படி பிழியப்பட்டிருக்கிறது அபிஷுதம்.

‡ பாடாமல் சாதாரணமாய் சொல்லுகிற ஒருவீதஸ்தோத்திரம். இதற்கு சஸ்திரம் என்றும் பெயர்வழங்கும்.

§ ஸோமத்தின்குணத்தை வருணிக்கிற.

¶ எஜமானர்களையெலலாம்வருணிக்கிற

‖ வாயுவானவர் "நல்லது ஸோமத்தைக்குடிக்கிறேன்" என்கிறதாகதாத்பரியம்.

௫. இந்திரவாயுக்களே, இவைகள்* அபிஷுதங்களாயிருக்கின்றன. நீங்கள்(எங்களுக்குக் கொடுக்க) அன்னத்தோடு கிட்டேவாருங்கள்; நிச்சயமாகவே ஸோமங்கள் உங்களை இச்சிக்கின்றன.

௬. வாயுவே, ஹவிஸின்† தொடர்ச்சியில் வசிக்கிறவர்களாகிய நீரும் இந்திரனும் அபிஷுதங்களானவைகளை அறிகிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் சீக்கிரமாய் கிட்டேவாருங்கள்.

வர்க்கம், ௫.

௧. வாயுவே, நீரும் இந்திரனும், அபிஷவம் பண்ணுகிறவருடைய ஆயத்தமாயிருக்கிற (வேறாமத்)தினிடத்திற்கு சமீபம் வாருங்கள். புருஷர்களே (உங்களுடைய வருகையினால்தான் இந்த) கிரியை சீக்கிரத்தில் (முடிவுபெறும்.) (இது) சத்தியம்.

௨. நீரை (பூமியின்பேரில்) சொரியும் தொழிலைச் செய்கிறவர்களாகிய, பவித்திரமான வலிமையையுடைய மித்திரனையும், சத்துருக்களை விழுங்குகிற வருணனையும் அழைக்கிறேன்.

(சு.) ஊஜ்ரவாய ஊஹொஸுதா உவவ்ரு பொஹிஷாமதம், ஊஷுவொவாஸுஷுஜிஹி.

(ஙு.) வாயவிஂத்ரஸ்துதெயஃ வஸுதாநாம் வாஜிநிவஸு, தரவாயாத உவஸ்ரவஸ.

(சூ.) வாயவிஂத்ரஸ்துவஸுஸுநுத சூர தாஸுவ நிஷத்ரூதம், ஊஷீஂதாயியாநரா.

(எ.) ஈத்ரஂஹரிவெவ்ரதஉகஂஷஂ, வரிணஸுரி ஸாஹவஂ, யியக்ஷுதா வீஂஹாயஸா.

* ஸோமங்கள்.

† அதாவது ஹோமம்.

அ. நீரைவிர்த்தி செய்கிறவர்களும், நீரைகொடுக்கிறவர்களுமாகிய மித்திராவருணர்களே (நீங்கள் இருவரும்) சத்தியத்தோடு* (அங்கவுபாங்கங்களால் மிகவும்) பெருகியிருக்கிற (இந்தயோம) யாகத்தை விபாபித்திருக்கிறீர்கள்†.

கூ. மேகாவிகளும் அநேகர் பொருட்டுப் பிறந்தவர்களும் அநேகருக்கு இருப்பிடமுமாகிய மித்திராவருணர்களே நமக்கு வலிமையையும் (யாகமாகிய இந்த)கர்மத்தையும் போஷியுங்கள்.

(அ.) ஐதநித்தா வரூணாவ்ய தாவ்யாவ்யதஷ்ஷா, கூதவ்ய ஹ ஷூஷாயை.

(கூ.) கவீநோ மித்ராவரூணா தவிஜாதா உரூக்ஷயா, உக்ஷம் ஷோ தெ கவஷம்.

* பௌருஷம் பொருந்தியவர்களே.

† மித்திரன் என்பது சாதாரணவழக்கத்தில் சூரியனுடையபேர்; வருணன்என்பது ஜலதேவதையின்பேர். ஆகினும் இவ்விருவர்களும் பன்னிரண்டு ஆதித்தியர்களில்சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் வேறோரிடத்தில் மித்திரன்பகலின் தேவதையென்றும் வருணன் இராத்திரியின் தேவதையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

* சத்தியமானபலனெனலுமாம்.

மநுநூல்.

க. அத்தியாயம்.

க. மஹரிஷிகளானவர்கள், விஷயாந்தரங்களில் செல்லாத மனத்தையுடையவராய் உட்கார்ந்து கொண்டிருக்கிற மநுவினிடத்திற் சென்று, அவரைப் பூஜித்துக், கிரமப்படி, இந்த வாக்கியத்தைச் சொன்னார்கள்.

உ. ஓ பகவானே! (பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், இவர்களாகிய) எல்லாவருணங்களுடைய தருமங்களையும், (அம்பட்டர், கணக்கர், புதலாகிய) லங்கர்ணசாதியாருடைய தருமங்களையும், அந்தந்தத்தருமங்களை, அவரவர்கள் எப்படி நடத்தவேணுமோ அதையும், ஆனுபூர்விகமாக, நீர்எங்களுக்குச் சொல்லக்கடவீர்.

ங. ஏனெனில், சொயம்புவாய், நினைவிற் கெட்டாததாய், அளவிடக் கூடாததாய்இருக்கிற, இந்த ஸமஸ்தவேதத்தின் பொருளாகிய, கருமங்களையும் தத்துவத்தையும் அறிந்தவர் நீர்ஒருவரேயல்லவா?

ச. அளவில்லாத சக்தியை யுடைய அந்த மனுவானவர், அந்த மஹாத்மாக்களாலே (மேற் சொல்லியபடி) கேட்கப்பட்டவராய், மஹர்ஷிகளைப் பூசித்துப் பிரத்தியுத்தரஞ் சொன்னர்.

ஞ. இந்த லோகமானது, தமஸ்ஸினால் சூழப்பட்ட தாயும், பிரத்தியட்சத்திற்கு விஷயமாகாததாயும், தனக்கு அறிகுறியாகிய அடையாளம் ஒன்றுமில்லாததாயும், தர்க்கத்துக்குவிஷயமாகாததாயும், அதனால் இன்னதென்று அறியக்கூடாததாயும், முழுதும் தூக்கத்திலிருப்பது போலே (அசைவில்லாமல்) இருந்தது.

கூ. அதன்பின்பு, மற்றொருவரால் உண்டாக்கப் படாதவராய், இந்திரியங்களுக்கு விஷயமாகாதவராயிருக்கிற பகவானவர், இருந்த பஞ்சபூதமுதலானவைகளைப் பிரகாசப் படுத்தி, அழிக்கக் கூடாத சக்தியை யுடையவராகவும், இருளைப் போக்கடித்தவராகவும் பிரகாசித்தவரானர்.

எ. எவரானால், (இந்திரியங்களை அநிக்கிரமித்ததாகிய) மனதினாலேயே, அறியத்தக்கவராயும், வெளியிந்திரியங்களுக்கு விஷயமாகாதவராயும், அவயவங்களில்லாதவராயும், நித்தியராயும், ஸர்வபூதமயராயும், நினைவிற்கெட்டாதவராயும், இருப்பவரோ, அவர், தானேஉற்பவித்தார்.

அ. அவர், தம்முடைய வுடலினின்றும், பலவிதமான பிரஜைகளை, ஸ்ரிஷ்டிக்க விருப்பமுடையவராய் முதலில் தியானமாத்திரத்தினாலேயே, ஜலத்தையுண்டு பண்ணி, அதில் பீஜத்தைவிட்டார்.

கூ. அந்த பீஜமானது, பொன்னைப் போலப் பிரகாசத்தை யுடையதாயும், சூரியனுக்குச் சமான தேஜஸ்ஸை யுடையதாயுமிருக்கிற வொரு முட்டையாக ஆயிற்று. அந்த முட்டையில், அவர் தாமே

லோகங்களுக் கெல்லாம் பிதாமகனானபி ரம்மாவாகத் தோன்றினர்.

கo. நரன், என்பது, பரமாத்மாவுக்கு ப்பெயர். அவரில் உண்டாக்கப்பட்டதா னதால், ஜலத்துக்கு நாரம் என்று பெயர் தரப் பட்டது. (அயநம், என்பது சஞ்சா ரஞ் செய்கிற மார்க்கம்); ஜலமானது பர மாத்மாவுக்கு முதலில் சஞ்சாரமார்கமா யிருந்த படியினாலே, அவர் நாராயணன் என்று சொல்லப் படுகிறார்.

கக. எது வானால், (மற்றெல்லாவற்றி ன் உற்பத்திக்கும்) காரணமோ, வெளியி ந்திரியங்களுக்கு விஷயமாகாததோ, ஜன னமும், மரணமு மில்லாததோ, உண்மை யாய் இருந்தாலும் (பிரத்தியட்சத் துக்கு விஷயமல்லாத படியினாலே) இல்லாதது போலவே தோற்று கிறதோ, அதனா ல் ஸ்ரிஷ்டிக்கப் பட்ட அந்த புருஷனை வன், உலகத்தில் பிரும்மா வென்று சொ ல்லப்படுகிறான்.

கஉ. அந்த முட்டையில் அந்தப் பக வானனவன், பிரும்மமானத்தின்படி ஒரு வருஷகால மிருந்து, பின்பு, தன்னுடை ய நினைப்புமாத்திரத்தினாலேயே, தானே அந்த முட்டையை இரண்டுபங்காகச்செ ய்தான்.

கங. அவன் அந்த இரண்டுதுண்டுக ளாலே (மேல்பங்கினால்) சுவர்க்கத்தை யு ம், (கீழ்ப் பங்கினால்) பூமியையும் உண்டு பண்ணினான். (அதுகளுக்கு) நடுவில், ஆ காசத்தையும், எட்டுதிக்குகளையும், சாசு வதமான (சமுத்திரம் என்று சொல்லப் பட்ட) நீர்நிருப்பிடத்தையும் உண்டுபண் ணினான்.

கச. அவன், பரமாத்மா வினின்று ம், ஸதஸதாத்மகமானமனஸ்ஸையும், மன ஸ்ஸுக்கு முன்னமே, தான் என்கிற அ பிமானத்தையே காரியமாக வுடையதாயு ம், தன் வேலையைச் செய்துக் கொள்வதி ல் வல்லமை யுடைய தாயுமிருக்கிற அஹங்காரதத்துவத்தையும் கிரஹித்தா ன்.

கடு. அஹங்கார தத்துவத்திற்கு மு ன்னதாய், ஆத்ம ஸ்வரூபமாகிய மஹத் துவத்தையும், மூக்குணமயங்களா யிரு க்கிற மற்றெல்லா வற்றையும, (சுவை, ஒளி, ஊறு முதலிய) விஷயங்களைக் கி ரஹிப்பனவாகிய, ஐந்து புத்திந்திரியங்க ளையும், ஐந்து கன்மேந்திரியங்களையும், கி ரமப்படி பரமாத்மாவினின்றும் கிரஹித் தான்.

கஙு. அளவிறந்த வீரியத்தை யுடை ய (அஹங்காரம், ஐந்து புத்திந்திரியங்க ள் ஆகிய,) ஆறின் சூக்ஷம அவயவங்க ளை ஆத்தும மாத்திரைகளிற் சேர்த்து, மனிதர், விலங்கு, பறவைமுதலிய, பூதங் களெல்லா வற்றையும் உண்டுபண்ணி னான்.

கள. யாதொரு காரணத்தினாலே, ச ரீரத்துக்கு அவயவங்களாய், ஸூக்ஷமங் களென்று சொல்லப்பட்ட (அஹங்கார ம், தன்மாத்திரைகள், ஆகிய,) ஆறும், அ வனுடைய (இனிச்சொல்லப் போகிற வைகளும், முன்சொல்லிய, பூதங்களும் இந்திரியங் களுமாகிய) இவைகளைக் காரி யமாக அடைகின்றனவோ, அந்தக் கார ணத்தினாலே, புத்திமான்கள் அவனுடை ய மூர்த்தியைச் சரீரமென்றுசொல்லுகி றார்கள். சரீரமென்பதற்கு ஆறுக்குஆதி ரயமாயிருப்பது என்பது பொருள்.

கஅ. அந்தப் பிரம்மத்தினின்றும் ஆ காசமுதலான மஹாபூதங்கள் (அவகாச ங்கொடுத்தல் முதலாகிய) தங்கள்தங்கள் தொழில்களோடுகூடவுண்டாகின்றன. எ ல்லாவற்றின்உற்பத்திக்குக்காரணமாயும், அழிவில்லாதாயு மிருக்கிற மனஸ்ஸும், வெளியிந்திரியங்களுக்கு விஷயமாகாதன வான, தன்தொழில்களோடு கூட(அந்த ப்பிரம்மத்தினின்றும்) உண்டாகின்றது.

கசு. புருஷனின்றும்உண்டானவையா யும், அதிகமான வல்லமையையுடையன வாயுமிருக்கிற,முன்சொல்லப்பட்ட(மஹ த்அஹங்காரம், அஞ்சுதன் மாத்திரைக ள் ஆகிய)ஏழினுடைய, சூக்ஷமங்களான மூர்த்தி மாத்திரைகளி னின்றும் இந்த லோகமானது உண்டாகின்றது; அழிவில் லாத பிரம்மத்தினின்றும், அழிவதான லோகம் உண்டாகின்றது.

உ0 இந்த மஹாபூதங்களுள் முன்னே யதிற்கு என்னென்ன குணமோ, அது வெல்லாம், பின்னே யதையும் அடையும். இவைகளுள் ஒவ்வொன்றிலும் முன்னைய

வையெத்தனையடங்கி யிருக்கின்றதுக ளோ அத்தனை குணங்கள் அதற்கு உண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றது. (அதாவது, ஆகாசத்துக்கு குணம் சப்தம்; வாயுவுக்குக் குணம் சப்தமும், ஸ்பர்சமும், தேஜஸ்ஸுக்கு, சப்தமும், ஸ்பரிசமும், ரூபமும்; இப்படியே மற்ற இரண்டுக்கும் கூட்டிக் கொள்ளலாம்.)

உக. அந்தப்பிரம்மா வானவர், சிருஷ்டியின் ஆரம்பத்தில் (பசு, குதிரை, இவைகளைப்போல்) எல்லாச்சாதிகளுக்கும் அவ்வவற்றிற்குரிய பெயரையும், (பிராமணனுக்கு அத்தியயனம் என்றும், அரசனுக்குக குடிகளைக் காப்பாற்றுதலென்றும், இதுமுதலான) தொழில்களையும், (குயவனுக்குக் குடஞ்செய்தலும், சேனியனுக்கு நூல்நூற்றலும், இவைமுதலாகிய) தொழில்களையும், வேதங்களா லறிந்து, வெவ்வேறுகவுண்டுபண்ணினார்.

உஉ. அந்தப்பிரபுவானவர் (பிரம்மா) பிராணிகளாகிய இந்திரன் முதலான தேவர்களுடைய கூட்டத்தையும், வெளியிந்திரியங்களுக்குவிஷயமாகாத (தேவர்களுள் ஒருசாதியாகிய) சாத்தியர்களுடைய கூட்டத்தையும், தொழிலையே சுபாவமாகவுடையவற்றினுடைய (அவையாவன, உயிரில்லாத கல் முதலானவை) கூட்டத்தையும், நித்தியமாயிராநின்ற யக்கியத்தையும் உண்டுபண்ணினர்.

உங. யாகம்நிறைவேறுவதற்காக விரிவாயும், நித்தியமாயும், இருக்கு, யஜுஸ், ஸாமம், இவைகளின் வடிவாயும், இருக்கிறவேதத்தை, அக்னி, வாயு, சூரியன், இவர்களினின்றும் கறந்தார் (அதாவது கிரஹித்தார்.)

உச. காலத்தையும், காலத்தின்பிரிவுகளையும் (அதாவது, வருஷம், மாசம், இவைமுதலானவைகளையும்) (அசுவனிமுதலிய)நட்சத்திரங்களையும், (சூரியன், சந்திரன்முதலிய) கிரஹங்களையும், நதிகளையும், சமுத்திரங்களையும், மலைகளையும், சமமானபூமிகளையும், மேடுபள்ளமான இடங்களையும் (உண்டுபண்ணினர்.)

உரு. மேலேசொல்லப் போகிற பிரஜைகளைஸ்ருஷ்டிக்கவிருப்பமுடையவராய், தபஸ்ஸையும், வாக்கையும், ஸ்தோஷத்தையும், காமத்தையும், குரோதத்தையும் முன் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டியையும் உண்டுபண்ணினர்.

உசு. காரியங்களைப் பிரித்தறிதற்பொருட்டு தருமத்தையும், அதருமத்தையும், பிரித்துக்காட்டினர். இந்தப் பிரஜைகளை, சுகம், துக்கம் முதலிய த்வந்துவங்களோடும் கூட்டினர்.

உள. பஞ்சமஹா பூதங்களுக்கு, எவைகள், அந்த பூதங்களாகப் பரிணமிக்கிறசூக்ஷம மாத்திரைகளாக நினைக்கப்படுகிறதுகளோ, அதுகளாலே, இந்தவுமஸ்தமும், (சூக்குமத்தினின்றும்ஸ்தூலம், ஸ்தூலத்தினின்றும் ஸ்தூலதரம்என்கிற) கிரமத்தின் படியுண்டாகிறது.

உஅ. பிரம்மாவானவர் முதலில் எந்தெந்த சாதிவிசேஷத்தை, என்னென்ன வேலையில் நியமித்தாரோ, அதது, மறுபடியும் ஸ்ருஷ்டிக்கப்பட்டபோதிலும், அந்தந்தத்தொழிலையே, தானேயடைகிறது.

உக. கொலைத்தொழிலும் கொலையாத்தொழிலும், மிருதுவும் குரூரமும், தருமமும் அதருமமும், மெய்யும் பொய்யும், என்கிற இவைகளில் எதை, அவர்ஸ்ருஷ்டிமுதலில் எதுக்குக்கொடுத்தாரோ, அதுஅதை, தானேயடைந்துகொண்டேவரும்.

ஈ0. எப்படி, அந்தந்தருது வருகிறகாலத்தில் ருதுக்கள் (வேப்பம்பூ, மாம்பூ முதலிய) தங்கள்தங்களுடைய அடையாளங்களைத் தாங்களே யடைகின்றனவோ, அப்படியே, தேஹிகளும், தங்கள்தங்களுடைய கருமங்களை, (சுபாவத்திலேயே) அடைகிறார்கள்.

ஈக. லோகங்கள் விருத்தி யடைகிறநிமித்தம், முகம், கை, துடை, பாதம், இவைகளினின்றும், (முறையே)பிராம்மணனையும், க்ஷத்திரியனையும், வைசியனையும் சூத்திரனையும் உண்டுபண்ணினர்.

ஈஉ. அந்தப்பிரபுவானவன் (பிரம்மா) தன்னுடைய தேகத்தை இரண்டுபங்காக்கி, பாதியால் பெண்ணும், பாதியால்புருஷனுமாகி, அவ்விடத்தில் விராட் என்னும் புருஷனையுண்டுபண்ணினர்.

ஈங. ஓ பிராமணசிரேஷ்டர்களே, அந்த விராட் என்னும் புருஷனவர், தப

ஸ்ஸ-செய்து எவனே யுண்டு பண்ணினாரோ, அவனே இந்தஸமஸ்தத்தையும்ஸ்ருஷ்டித்தவனுகிய தானென்றறியுங்கள்.

சுச. நான் பிரஜைகளைஸ்ருஷ்டிக்கவிருப்பமுள்ளவனாய், அதிகடினமான தபஸ்ஸைபண்ணி, முதலில், அதிபரிசுத்தாளாகிய பத்துப்பிரஜாபதிகளையுண்டுபண்ணினேன்.

சுடு. மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிரது, பிரசேதஸ், வசிஷ்டர், பிரகு, நாரதர் இவர்களை (உண்டு பண்ணினேன்.)

சுசு. இந்தப்பத்துப்பிரஜாபதிகளும், மிகுந்த தேஜஸ்ஸையுடைய, வேறுளமும னுக்களையும், தேவர்களையும், தேவர்களுடையஇருப்பபிடங்களையும், மிகுந்தசக்தியையுடைய மஹர்ஷிகளையும், உண்டுபண்ணினார்கள்.

சுள. யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுக்கள், பிசாசங்கள், கந்தருவர், அப்ஸரஸ்ஸுக்கள், அசுரர்கள், நாகர், சர்ப்பங்கள், சுபர்ணங்கள் (கருடபட்சிகள்) வெவ்வேறுனபிதிருக்களுடைய கூட்டங்கள் இவைகளையும் உண்டுபண்ணினார்கள்.

சுஅ. மின்னலையும், இடியையும், மேகங்களையும், பலவர்ணங்களையுடைய இந்திரன்வில்லுக்களையும், உற்கைகளையும், நிர்க்காதங்களையும், தூமகேதுக்களையும், இன்னும்பலவிதமான கோதிகளையும் (உண்டுபண்ணினார்கள்.)

சுக. கிந்நரர்களையும், குரங்குகளையும், மத்ஸியங்களையும், பலவிதமானபட்சிகளையும், பசுக்களையும், மிருகங்களையும், மனிதர்களையும், இரண்டுவரிசை பற்களையுடையபுலிமுதலியவற்றையும், (உண்டுபண்ணினார்கள்.)

சுஎ. கிரமிகளையும், கிடங்களையும், பதங்கங்களையும், யூகம், மட்சிகம், மத்குணம், இவைகளையும், தமிச மசகங்களையும், பலவிதமான (மரஞ்செடிமுதலிய) ஸ்தாவரங்களையும் உண்டுபண்ணினார்கள்.

சுஙு. இப்படி, ஸ்தாவர ஜங்கமமயமாயிருக்கிற இந்தலோகமுழுதும், மஹாத்துமாக்களாகிய இந்த மரீசி முதலியவர்களினாலே, என்னுடையஆக்கியையின்படி, தபஸ்வின்மகிமையைக் கொண்டு, அந்தந்தகருமத்திற்குத் தகுந்தபடி ஸ்ருஷ்டிக்கப்பட்டது.

சுஉ. (ஸ்ருஷ்டிக்கப்பட்டனவற்றுள்) எந்தெந்தப்பூதங்களுக்கு எப்படிப்பட்டகருமம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறதோ, அதையும், ஜன்மாதிக்கிரம யோசத்தையும், அப்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சுசு. பசுக்களும், மிருகங்களும், இரண்டுவரிசைப்பற்களையுடைய வியாளங்களும், ரக்ஷஸ்ஸுக்களும், பிசாசங்களும் மனிதசாதிகளும், ஜராயுவினின்றும் (அதாவதுகருப்பப்பை) உண்டாகிறவர்கள்.

சுசு. பறவைகளும், ஸர்ப்பங்களும், முதலைகளும், மீன்களும், ஆமைகளும், இன்னும் இவைகளைப்போல் நீரிலும், பூமியிலும் வாழ்கின்ற ஜந்துக்களும், முட்டைகளினின்றும் உண்டாகின்றன.

சுஙு. கடிக்கிற குணத்தையுடைய மசகங்களும், யூகங்களும், ஈகளும், மத்குணங்களும், வேர்வையினின்றும், உண்டாகின்றன. வேர்வைக்கு வேறுதுவாயிருக்கிற (உஷ்ணத்தினின்றும்) மசகமுதலியவற்றைப் போன்ற வேறேசந்துக்களும் உண்டாகின்றன.

சுசு. (மரங்கொடிமுதலிய) ஸ்தாவரங்கள் (விதையையும், பூமியையும்) பிளந்துகொண்டுமேலேவருவன இவைகளுள் சில, விதைவிதைத்து உண்டாவன சில, கொம்பு, வேர் முதலியவைகளை நடுவதாலுண்டாவன. (நெற்பயிர் முதலியவற்றைப்போல) ஓஷதிகளாயிருப்பன. ஒருகரம் பழுத்தலோடே நஷ்டப் போவன. அவைகள் விஸ்தாரமான புஷ்பத்தையும் பலத்தையுங் கொடுப்பன.

சுள. எவைகள் வநஸ்பதிகள் என்று சொலலப்படுகின்றனவோ, அவைகளெல்லாம், பூக்காமலே பழுப்பன. (மற்றவிருட்சங்களெல்லாம்) பூவைத்தருவனவென்றும், பலத்தைத்தருவனவென்றும் இருவகைப்படுவன.

சுஅ. (வேரில் நின்றுமே, அனேகங்கொடிகளாகப்புறப்படுவனவாகிய) குச்சங்களும், (ஒருவேரிலிருந்தே அனேகங்கிளைகளாகப்புறப்படுகிற) குல்மங்களும், அனேகவகைப்பட்டிருப்பன புல்சாதிகளு

ம் அப்படியே பிரதானஈளென்றும் வல்லிகளென்றும் அனேகங்களிருக்கின்றன. இவைகளுள்ளும் சில, விதையினின்றும் உண்டாவன, சில கிழங்களை நடுவதால் பயிராவன.

சக. இந்த விருட்சாதிகள், கர்மத்தினாலுண்டாய், அனேகவடிவுகளையுடைய தபஸ்ஸினால் சூழப்பட்டனவாய், வெளிப்படாமல் உள்ளேதானேயடங்கியிருக்கிற அறிவையுடையனவா யிருப்பன அதனால், இவையாவும் சுகதுக்கங்களையுடையன.

சஎ. இப்படி, மஹாவுக்கிரமாயும், எப்போதுமிகழ்ந்துகொண்டேயிருப்பதாயுமிருக்கிற இந்தப்பூத ஸம்ஸாரத்தில், பிரம்மாமுதலாய், விருட்சாதிகள் ஈறுகப் பிறப்புகளெல்லாம் சொல்லப்பட்டன.

சஅ. நினைப்புக்கெட்டாத வல்லமையையுடையஅந்தப்பிரஜாபதியானவர், மேற்சொல்லிய எல்லாவற்றையும், என்னையும் சிருஷ்டித்துவிட்டு, (ஸ்ருஷ்டி) காலத்தை (ப்பிரளய) காலத்தினுமேலே யழிப்பவராய்க கொண்டு, ஆத்துமாவில் அந்தரத்தான மாய்விட்டார்.

பிரகிருதிசாஸ்திரம்.

ஏதனுடைய விசிஷ்டகுருத்துவத்தை அறிய விரும்புகிறோமோ, அது, சூர்ணமாகவிருந்தால் அதை யேற்றுக்கொளளும்படியான தாய், ஒருகிண்ணியைத் தண்ணீரிலே தொங்கவிட்டு, அந்தக்கிண்ணியின் குருத்துவத்தைப் பரிஹரிப்பதற்காக, ஏதாவது ஒரு உபாயஞ் செய்யவேண்டியது. கிண்ணியின் குருத்வத்திலுல், அதில்நிறுக்கப்பட்ட வஸ்துவினுடைய நிறைக்குயாதொரு ஏற்றத்தாழ்ச்சியும் உண்டாகக்கூடாது.

பதார்த்தமானது. நீரினும் குறுத்துவத்திற் குறைந்ததாகவிருந்தால், அதுநீரின்மேல் மிதக்குமாதலால், அதில்எவ்வளவுபாகம்நீரில்அமிழ்ந்திருக்கிறதோ அதையறியவேண்டியது. பதார்த்தத்தின்முழு, கனப்பிரமாணத்தை, அமிழ்ந்தபாகத்தின்கனப்பிரமாணத்தால் பாகித்தால் வருகிற ஈவு, அதன்விசிஷ்ட குருத்துவமாம்.

பதார்த்தம் மிதந்துகொண்டிருக்கும்போது, அதில் அமிழ்ந்திருக்கிறபாகத்தால், பதார்த்தத்தின்முழுகனப்பிரமாணத்தைப் பாகிக்கவரும் ஈவை, ஒரு எளிதானவிதத்தால் அறியலாம். நீரை, லம்பாகிருதியாகிய பக்கங்களையுடையபாத்திரத்தில்வைத்து, பாத்திரமும் அதிக அலைமில்லாததாக விருந்தால், பதார்த்தத்தை நீரின்மேல்மிதக்கவிடுகிறபோதே, பக்கங்களில், நீர்இவ்வளவு உயர்கிறதென்று தெரியும். பின்பு,பதார்த்தத்தைமுழுதும் அமிழ்த்தினால், அப்போது பக்கங்களில் நீர் இன்னும் அதிகமாக ஏறும் பதார்த்தத்தை மிதக்க விடுவதற்குமுன் நீரின்மேற்புறமிருந்த இடத்தையும், அதுமிதக்கும்போது யிருந்த இடத்தையும் அதுமுழுதும் அமிழ்ந்தபின், நீரின்மேற்புறம் இருக்கிற இடத்தையும், அடையாளத்தினால் அறிந்தால், இரண்டுதரத்திலும், நீர் ஏறினவுயரங்கள் தெரிவன. இவ்வுயரங்களின் தாரதம்மியந்தான் பதார்த்தத்தினால் விலக்கப்பட்ட நீர்களுடைய, கனப்பிரமாணங்களின் தாரதம்மியம். அந்தத் தாரதம்மியந்தான், மிதக்கின்ற பதார்த்தத்தினுடையமுழுகனப்பிரமாணத்திற்கும், அதின் ஆழ்ந்தபாகத்தின் கனப்பிரமாணத்திற்கும் இருக்கிறதாரதம்மியம் இதுதான். அந்தப்பதார்த்தத்தின், விசிஷ்டகுருத்துவம்.

நீரினும் பலுவிற்குறைந்த பதார்த்தங்களின் விசிஷ்டகுருத்துவத்தை அறிவதற்கு மற்றொரு உபாயமிருக்கிறது. ஏதன் விசிஷ்ட குருத்துவத்தையறிய வேண்டுமோ, அதை, நீரினும் பலுவான வொரு பதார்த்தத்தோடு சேர்த்துக்கட்டுகிறது பலுவான பார்த்தத்தின் கனப்பிரமாணம்எவ்வளவிருக்கவேண்டுமென்றால், அது இலேசான பதார்த்தத்தோடு சேர்ந்திருந்தபோதிலும், இரண்டுமேசேர்த்துநீரிற்குள் முழுதும்படியாயிருக்கவேண்டியது ; தெப்பத்தினமேல்கற்கம்பம்நிற்பதுபோலிருக்கக்கூடாது. இப்போது அவ்விரண்டையும் ஆகாசத்தில் நிறுத்துக்கொண்டு, பின்பு நிரிற்குள் அமிழ்த்தி நிறுக்கவேண்டியது. இப்போது அவ்விரண்டிற்கும் இயல்பானபலு இவ்வளவென்றும், அந்தப்பலுவில், நீரில் நிறுப்பதால் இவ்வளவுகுறைந்து போகிறதென்றும் செம்மையாயத் தெரியும் இப்படியழக்கப்பட்ட பலுவானது, கனப்பிரமாணத்தில் இவ்விரண்டு பதார்த்தங்களுக்குஞ்சமமான, நீரின்பலு இப்போது, இலேசான பதார்த்தத்தைக்கழற்றிவிட்டு, பலுவானதைமாத்திரம் ஆகாசத்திலும் நீரிலும்நிறுத்தால், கனப்பிரமாணத்தில், பலுவானதற்கு மாத்திரம், சமமான நீரின்பலு அகப்படும். ஆகையினால் இரண்டுபதார்த்தங்களையும் சேர்த்து நிறுத்தபோது குறைந்த பலுவிலிருந்து, பலுவான பதார்த்தமாத்திரம் இழந்த பலுவைக்கழித்துவிட்டால்,

வருகிறபேதம். இலேசானபதார்த்தம் இழுத்ததாக விருக்கவேண்டியது. அதாவது, கனபரிமாணத்தில் இலேசானபதார்த்தத்துக்குச்சமமான, நீரின்பளு இதனால், இலேசானபதார்த்தத்தின் இயல்பான கனத்தைப் பாகித்தால் வருகிற ஈவு, அதன்விசிஷ்டகுருத்வமாகிறது.

அர்த்தசாஸ்திரம்.

சம்பளங்களைப்பற்றியும், ஜனஸங்கியையைப்பற்றியும்.

முன்பதிப்பில் முதலானது செல்வர்களது சொத்தாயினும், ஏழைகளுக்குப்பிழைப்பைத் தருவதாகையால், அது அவ்விருவருக்கும் பயன்படுவதென்று கூறினோமல்லவா? இன்று செல்வர்கள் அம்முதலினால் அடையும் லாபமானது வேலைக்காரர்களுக்குப்பெறும் சம்பளம் அல்லது கூலியைவிட எத்தினை மடங்கு அதிகமானதென்று விசாரிப்போம். செல்வர்களுடைய லாபத்துக்கு அளவில்லை. வேலைக்காரர் சம்பளமோ அவர் உயிர்வாழ்வதற்கு அவசியமாய் வேண்டியதற்குறையாமலும், அவரால் உண்டாக்கப்படும் பண்டங்களின் முதிப்புக்குக் குறைந்துமிருக்கவேண்டும். ஏனெனில் அவசியமாய்தேவையுள்ள உண்டி ஆடை முதலியவைகளைக்கூட சம்பாதித்துக்கொள்வதற்கு போதாத சம்பளம் கொடுக்கப்படின் வேலைக்காரர் அகப்படமாட்டார்கள். அவர்களது உழைப்பினால் உண்டாகும் பொருள்களின் விலைக்குச்சமானமாக சம்பளங்கொடுத்தால் முதலைப்படைத்தவற்கு ஒருவித லாபமுமிராததால் அவர்கள் வேலைக்காரரை வைத்துக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் ஊழியக்காரர் சம்பளத்துக்கு இவ்விரண்டு எல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கு மிடையில் வெகுவித அந்தஸ்துகளிருக்கலாம். அவையாவெனில், ஒருவேலைக்காரன் தன்னைமாத்திரம் காப்பாற்றிக்கொள்வதற்குப் போதுமான சம்பளத்தைப்பார்க்கிலும், தன் பெண்சாதி பிள்ளைகளும் கூட பிழைப்பதற்கு வேண்டிய சம்பளத்தைப்பெறலாம். அப்படியில்லாவிடில், வேலைக்காரர் வேலைக்கொத்துக்கொள்ளமாட்டார்கள். மேலும் இவர்களுக்கு கேவலம் பிழைத்திருப்பதற்குமாத்திரம் எவ்வளவு வேண்டுமோ அதற்கு மிஞ்சி பணமுள்ளவர்கள் கொடார். கேவலம் பிழைத்திருப்பதற்கு ஆவசியகமானவைகளெனில்; உண்டி ஆடைமாத்திரமேயல்ல. நாட்டுவழக்கத்திற்கும் அதின் சீதோஷ்ண பேதங்களுக்கும் தக்கபடி உயிர்வாழ்வதற்கு வேண்டிய மற்றுஞ்சில ஆறுகூலியங்களும், ஏழைகளுள் ஒருவாறு கண்ணியமாகப் பிழைத்திருப்பதற்கும், சுகித்திருப்பதற்கும், வேண்டியவைகளுமாம். இங்கிலாண்டில் விறகுகளும், குளிரைப் போக்கடிக்கத்தக்க கம்பிளிமுதலியவைகளும் மிகவும் ஆவசியகமான சாமான்கள் ஆபிரிக்காவில் அவை பயன்படா. நாகரீகம், தனவிருத்தி, தொழிற்பயிற்சி இவை தோன்றுங்கால், அவசியமான பொருள்களும், அதிகரிக்கும். இங்கிலாண்டில் நாரினால் செய்யப்பட்ட உடுப்புகளும், ஜோடுகளும், மேஜோடுகளும், மிகவும் அவசியமானவைகளாக எண்ணப்பட்டிருக்கின்றன. கண்ணாடி சாளரங்களையும், புகைகூண்டுகளையும், உடைய வீடுகளும், அப்படியே ஆய்விட்டன. ஏனெனில் ஏழைகளுக்கு இவ்வித சவுக்கியங்களில்லாவிடில், அவர்கள் அக்குளிர் மிகுந்த தேசத்தில் ஜீவித்திருக்கமாட்டார்கள். அயர்லாண்டிலிருப்பவர்களுக்கு இவைகள் அவசியமில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளை பூமியின்கீழ் ஒருசிறிய அறைகட்டி அதில் வளர்க்கிறார்கள். அதின் கதவே அதற்கு ஜன்னலாயும், புகைகூண்டாயு முபயோகப்படுகின்றது. இவ்வாறு அதிகசுகங்களை யனுபவிக்காதிருத்தல் மேலெனச் சிலருக்குத் தோன்றும். ஏனெனில், கருப்பு நேரிடும் கீலத்தில் இவ்விதசுகங்கள் கிடைக்கமாட்டாவாகையால் அவைகளை யனுபவித்தவர்களுக்கு மிக்க வருத்தம் புண்டாகும். ஆயினும் இது சரியல்ல. ஏழைகளுக்கு மேன்மேலும் ஆவசியகமானவைகள் அதிகரித்தால் அவர்களுக்கு விசேஷ சவுக்கியமும், பரிசுத்தமும், விவேகமும், பலமும், உழைப்பும் உண்டாகும். ரொட்டி, இறைச்சி, காய்கனிகளிவைகளைப் புசித்திருக்கும், இங்கிலாண்டுதேசத்தார் கேவலம் உருளைக்கிழங்கினால் மாத்திரம் ஜீவித்திருக்கும் அயர்லாண்டு தேசத்தாரைவிட அதிக திருடரும், சௌக்கியமுமுள்ளவர்களாயிருக்கின்றனர். மேலும் சுத்த அற்பமான பண்டங்களால் உயிர் வாழ்பவர்க்கு கருப்பு நேரிட்டு அப்பண்முடம் கரமாய்விடுங்கால் பிழைக்க ஆதாரமின்றி, பரிதவிப்பார்கள். நமது தேசத்தில் ஜனங்கள் பெரும்பாலும், அரிசியினாலேயே ஜீவிப்பதினால் கூராமம்வரும்போது உண்ண உணவின்றி, ஆயிரம் ஆயிரமாக கணக்கின்றி இறக்கிறார்கள். ஆகையால் ஏழைகளுக்கு கொடுக்கப்படும்சம்பளம் கேவலம் உயிர்வாழ்வதற்குமாத்திரம் ஆதாரமாயிருப்பதன்றி, சில சுகங்களையும் அனுபவிக்கத்தக்கதாக இருக்கவேண்டும்.

இப்படி சம்பளம் பலவாறுக விருப்பதற்கு க்காரணமென்ன? அத்தேசத்திலுள்ள மூதல் எத்தனைபேர்களுக்குப் பிழப்பை யுண்டாக்கத்தக்கதாக விருக்குமோ அதைச்சார்ந்திருக்கும். அதாவது அதை ஜனஸங்கியையின்மீதும், பொருள் விஸ்தீர்ணத்தின் மீதும், கணிக்கவேண்டும். அதிக ஜனங்களிருந்து பண்டங்கள் கொஞ்சமாயிருக்குமேயானின் வேலைக்காரர் சம்பளம் மிக்கதுறைவாயும், ஜனங்கள் கொஞ்சமாயிருந்து, விளையும்பண்டங்கள் விஸ்தாரமாயிருந்தால் சம்பளம் அதிகமாகவும், ஜனஸங்கியைக்குத் தக்கமிதமான பொருளிருந்தால் மிதமான சம்பளமாகவும், வெவ்வேறுகமாதிக்கொண்டிருக்கும்.

இவ்விஷயத்தைப்பற்றி வேறு திருஷ்டாந்திரமொன்று கூறுவோம். அதாவது ஒருமனித ரில்லாத்வீபத்தில் சிலர்குடியேறிப்போய் நிலத்தை பங்கிட்டுக்கொண்டு பயிரிட்டுப்பிழைக்கத்தொடங்குவார்களேயாகில், அவர்களே வேலைக்காரராயும்,சொந்தக்காரராயுமிருப்பார்களாகையால், அவர்கள் சரீரப் பிரயாசையினுலடையும் பொருள்கள் யாவையும் தங்களே யனுபவிப்பார்கள். இப்படியிருக்க சிலநாள் கழித்தபின்பு அங்கு ஒரு கப்பல் கரைதட்டிப்போனதால் சிலர் தெற்றிதடுமாறியங்குவந்துசேர்ந்தால், அவர்கள் முன்னிருந்தவர்களுக்குவேலைக்காரராகி உழைத்து கொஞ்சமபொருளைத் தாம் ஜீவிப்பதற்கு கைம்மாருகபெறுவர். புதிதாய் வந்தவர்களுக்கு முதலில் உணவையளிப்பதற்கு முன்னிருந்தவர்களிற் சிலர் கைமீதியாக சம்பாதித்து வைத்திருந்த பொருள்கள்தான் உதவும். இதே அவர்களுக்கு முதல். இந்த கொஞ்சம் பொருள்களுக்குப் பசியினுல்வருந்தும், அந்த புதிதாய் வந்தவர்கள், மேல்விழுந்துக் கெஞ்சி எவ்வளவு கொஞ்சம் கிடைத்தபோதிலும், திருப்தி அடைந்து வேலைசெய்ய முயல்வார்கள். இப்படி தங்கள் கஷ்டநிமித்தியம் தாங்களே வலுவில் வந்து வேலைசெய்பவருக்கு விசேஷ கூலி - அல்லது - சம்பளம் கிடைக்கமாட்டாது. ஆகையால் முதல் கொஞ்சமாயுள்ளவரையில் அதைப் படைத்தவர்கள் வேலைக்காரரை யதிகமாக வைத்துக் கொள்ள கோரமாட்டார்கள். புதிதாய் வந்தவர்கள் தங்களுக்கு உணவை யளிப்பவருக்கு உழைத்து விசேஷ பண்டங்களை யுண்டாக்கியபிறகு முதல் விர்த்தியாகுமாகையால் அதைவிசேஷமாகப்படைத்தவர்கள்முன்னிருந்த சுகங்களைவிட அதிக சுகங்களை யடைவதற்குக்கருதி, சிலர் சோகவீடு கட்டுவதிலும், சிலர் தங்கள் புலக்களுக்கு வேலியேற்பமித்துவதிலும், சிலர் ஓடம் கட்டிக்கொள்வதிலும், இவ்வேலைக்காரரை யுபயோகிக்க இச்சிப்பார்கள். ஒவ்வொருவனும் தன்கருத்தை யீடேற்றிக்கொள்ளவேண்டுமென்று கருதுவானுகையாலும், மேலும் திரவியத்தைப் படைத்தவர்கள் அதைவேலைக்காரர் விஷயத்தில் செலவழித்தாலொழிய அதினுல் லாபத்தை யடைவார்களாகையாலும், இவர்கள் போட்டியின்மீதுவேலைக்காரரை யழைப்பார்கள். வீடுகட்டிக்கொள்ளக் கருதுபவன் நாளொன்றுக்கு இரண்டணு கொடுப்பதாகச் சொன்னுல் ஓடம் சட்டக்கோருபவன் நாலணுகொடுப்பதாகச் சொல்லுவான். புலத்துக்கு வேலி போடவேண்டுவோன் அரை-ரூபாய் கொடுக்கிறேனென்பான். இவ்வாறு வேலைக்காரரை போட்டியின்மீது அழைக்குமபோது அவர்கள் யார் அதிக கூலி தருகிறார்களோ அவர்களிடம் சேருவார்கள். ஆகையால் முதலதிகமாக வேலைக்காரர் கூலியும் அதிகரிக்கும்.

சரித்திரம்.

தொடர்ச்சி.

யூரோப்பில் சீர்மையான அரசையும் போலீசையும், கலைகளையும்விருத்திசெய்யமுக்கியகாரணமெனப் பூர்வபாகத்தில் நாம் குறிப்பிட்ட ஏற்பாடுயாதெனில் பலநகரங்களை யொன்முகச்சேர்த்து, அவற்றிற்குநாட்டார் அல்லது அதிகாரஸ்தங்களை நியமித்து, அவர்களுக்கு நகர் விசாரணையில் ஸ்வதந்திரத்தைக்கொடுத்ததேயாம்,முடிவில்பியூடலரசுகொடுங் கோன்மையாய்க் காணப்பட்டது. கனவான்களுடையஅக்கிரமங்களுக்குக்கங்குகையில்லை. இவர்கள் குடிகளிற் பெரும்பாலை அடிமைகளாக்கத் தொடங்கியதனுல், ஸ்வாதந்திரியர், அடிமைகள் என்னும் வியவஸ்தையற்றது. நாடுகளில், வசித்துக்கொண்டு கனவான்களுடைய நிலங்களையுழுது வந்திருந்த குடிகள்மாத்திரமேயல்ல; இந்தக் கஷ்டத்திற் பட்டவகள் பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ளவர்களும் ஸ்வரூபூர்த்தம் ஒருதலைவனை நியமித்துக்கொண்டு, அவன் எப்படிவிதிக்கினும், அதற்குட்பட்டிருந்தனர். சாதாரணமாய் மனிதருக்கு அபாதக ஸ்வாதந்திரியங்களெனவழங்கப்பட்டனவும் அக்குடிகளுக்குக்கிடைக்கவில்லை. ஸ்வப் பிரயாசையால் ஸ்வார்ஜிதமான பொருள்களைக்கூட, சிவகாலத்திலாவது அல்லது மரணசாஸனத்திலாவது பிறருக்குக்கொடுக்கவும், குழந்தைகள் வாலிபதசையிலிருக்கையில் அவ

ர்களுக்கும் போஷகனாயமிக்கவும், சற்
றேனும் அதிகாரமின்றி, யஜமானனுடையஅ
ங்கீகாரத்தைக் கொஞ்சம் பணச்செல்வட
ன் பெற்றுலன்றி மணஞ்செய்து கொள்ள
வுங்கூடாமலும், ஏதாவ தொருவழக்கைத்
தொடங்குல் வழக்குமுழுதும் கோர்ட்டி
ல்கேட்கப்பட்டு யஜமானனுக்கு தியாயத்தீ
ர்ப்புக் கூலியைக் கொடுத்துவிட்டு வியாஜி
யத்தை முடித்துக் கொள்ளலாமேயன்றி ம
டுவில் உபயத்தார் சமாதானத்தால் அதை
றுத்திவிடசக்தியின்றியுமிருந்தார்கள். கஷ்
டதொழில்களேயன்றி யிந்தத்தொழில்க
ளையும் செய்யமிதமின்றி விஷ்கண்டகமாக
நிர்ப்பந்திக்கப் பட்டனர். சிலவிடங்களில்
மூட விதிகளாலும், இதர சில விடங்களில்
அன்னியாய நிர்ப்பந்தங்களாலும், உழைப்பி
லாக்கம் குறைந்தது. பியூடல் ராஜாங்கத்தி
ன் குரூரவிதிகளும் உழைப்பின் விருத்திக்கு
விரோதப்பட்டிருந்தன.

இடெலியிலுள்ள பட்டணங்களுக்கு வர்
த்தகத்தில்நோக்கம்விழுந்து அதன்பலன்கள
ப்படிப்பட்டவையானதென்று அறியத்தொ
டங்கியபிறகு, கர்வம் பிடித்தகனவான்களின்
கொடுமையைக்கவிழ்த்து தங்களுக்குள் ஒ
ருசமவரிசையேற்படுத்திச் சுருக்கில்தங்கள
சொத்துக்களைக்காத்துக்கொள்ளவும், உழை
ப்பைவிருத்திப்படுத்தவும், எண்ணங்கொண்
டார்கள். ராசதானி தூரமாயிருந்ததலால்,
ஜெர்மனரசர்களுக்கு, முக்கியமாய் பிரா
ங்கோனியா, சுவேபியா சந்ததியாருக்கு
தெலயின் மேலிருந்த அதிக இரம்ம குன்
றியது. அவர்களுக்குப்போப்புடனும் கீழ
டங்காத குடிகளுடனும் நிரந்தரமாயிருந்
து கொண்டிருந்த சண்டைகளால் இதெ
லியின் உட்போலீசில் கவனம் அவர்களுக்
குச்சுத்தமாய் விழாமற்போயிற்று. இந்தவே
துக்களினல், பதினேழும் நூற்றாண்டின்
முதலில், இடெலிதேசத்துக் குடிகள்புதியள்
வதந்திரங்களை வகித்துக்கொண்டு, ஒருமை
ப்பாட்டுடன் அனேவர்சம்மதத்தோடு சி
விதிகளை யேற்படுத்தி, அவற்றிற்கு அடங்
கி நடக்கும்படி நிச்சயித்தார்கள்.

இருமனையாசிரி.

மா-ரா தத்துவபோதினி கர்த்தர்
ர்களுக்கு,

சோதர்களே.

பங்காளதேசத்தில் பிரசுரஞ்
ய்துவரும் பத்திரிகை யொன்றைப்
டிக்கையில் அதில் யொருவர் சு

பெண்டின்மேற் பெண்டுகொள்ளப்போ
கிறதாக நப்பாசக்கேள்விப்பட்டு ஐரோ
ப்பிய ஸ்திரீ யொருத்தி அப்படிசெய்வ
தைத் தடுக்கும் பொருட்டு எழுதிய
கடிதமொன்றைக் கண்டேன். நீதிசத்
விலகி நடப்பது பாபமாயிருப்பதுமல
லாமல் இழிவான தென்றும் எண்ணுகிற
அன்னிய கண்டத்தாராகிய ஐரோப்பிய
ஸ்திரீகளும், அருவருக்கத்தகதாகிய இ
வ்வாறு செய்வதின் கொடுமையை, யாது
காரணத்தைப் பற்றியாவது ஸ்திரீகளின்
சுகசந்தோஷத்தை எவ்வளவும் மனதிற்
கொள்ளாதவர்களாகிஎக்காலத்தில்அனே
கர்களை மணம்புரியும் நம்மவர்களுக்கும்,
தரிவிக்கும் பொருட்டு ஹ்ருணபாஷை
லெழுதியிருந்த இக்கடிதத்தை தமிழ்
படுத்தி தேசத்தின் விர்த்தியையே நாடு
ந் தங்கள் சிறந்த பத்திரிகையில் பிரசுர
ந் செய்யும்படி அதிக ஆவலுடன் அனு
ப்புகிறேன். கௌரதையுள்ள இந்த ஸ்தி
ரீ கிஞ்சித் தேனும் சுவப் பிரயோஜனமி
ன்றி நன்மை பூண்டெழுதிய இந்நிரூபத்
தின் கருத்தை நம்மவரும் தங்கள் நுண
றிவைக்கொண்டு அதின் குத்தத்தை
யும், குணத்தையும், செவ்வையாகசிர்தூ
கி தத்தம் புத்திக்கேற்ப நடப்பார்களெ
ன்று உறுதியாய் நம்புகிறேன்.

இப்படிக்கி
சுதேசி.

ஐயா,

எவ்வளவும் அறிமுகமில்லாத உமக்
கு நானெழுதும் கடிதத்தைப் பார்க்க ஆ
சரியமாயிருக்கும். நீர் ஓர் காரியம்செ
ய்ய உத்தேசித் திருப்பதாய்க் கேழ்வியுற்
று அதை என்னல் கூடியவரையில் தடு
க்கப்பார்க்கிறேன். இப்போதுநீர்விவாகம்
செய்திருக்கிற பெண் அதிசௌந்தரியமு
ள்ளவளாயினும், ஒழுக்கத்தும் கல்லா
தவளென்று பலரால் கேழ்வியாகிறேன்.
அவளைக் கற்பிக்க அவள் தாய்தந்தைக
ள் தவறிப் போனர்களேயன்றி, கல்லா
மை அவள் குற்றமன்று. இப்போதுதகா
னென்ன, அவள் இன்னும் பாலஸ்திரியா
கையால் எளிதில்கற்பிக்கலாம். நீர்கலியா
ணஞ்செய்ய எண்ணியிருப்பவளைப்போ

ல சிக்கிரத்தில் இவளை யு மாக்கக்கூடு
உமது பள்ளிக்கூடவேளை போக மற்ற
காலத்தில் கற்பிக்க ஒழியாவிட்டால், அ
வளை வேறிடத்துக் கனுப்பலாம். கல்கத
தாவில் போயிருந்து கல்விப் பயிற்சி செ
ய்ய உதவி செய்யத்தக்க பந்துக்கள் அவி
டமுனக் கொருவரு மில்லையா? அப்படி
க்கனுப்பக் கூடிய பக்ஷத்தில் அவளிருக்
குமிடத்தை தெரிவித்தால் உபாத்தியாய
ரை நியமித்து பிரதிதினம் கற்பிக்கும் ப
டியாயும், அடிக்கடி போய்ப்பார்க்கவும்,
என் தாய்க்கெழுதுகிறேன். மேற்படியி
டத்துக்கனுப்ப சாத்தியப் படாவிட்டால்
டில்லியில், பாபுவினிடத்திற்கனுப்பினுல்
பங்காளபாஷை கற்பதுமன்றி நானு
போயவளடையும் வித்தியைப் பார்ப்
துடன் இங்கிலீஷ் கற்பிக்கவும்கூடும்.க
கத்தாவிலுள்ள ஸ்திரீகள் விஷயத்தில்
நாநெடுத்துக் கொண்ட சிரமத்தினுலெ
னக்கு நேரிட்டிருக்கிற வியாதிமுழுமை
யும் சொல்லப் படாமல் மிகவும் அசக்தி
யாயிருப்பதால் பிரதிதினம் போக அனு
கூலிக்காது.

நீர் மற்றொருத்தியை விவாகஞ் செய்
துக் கொண்டால் இப்போதிருப்பவளுக்
கு அளவிலாத்துன்பத்தைஉண்டுபண்ணு
வதுடன் நீரும் நிங்காத் துயரத்துடன்
காலங்கழிக்க வேண்டியிருக்கும். இது எ
னக்கு அனுபவசித்தம். அநேகவருஷகால
மாய் இத்தேசத்து ஸ்திரீகளுடன் பழகி
யதில் பெண்டின்மேற் பெண்டுகொண்
டவனுக்கும், அவன் பத்தினிமாருக்கும்,
விளையும் நாவினுற் சொல்லுதற்கரிய து
ன்பத்தை நானே கண்ணுற்றிருக்கிறேன்
இருமனையாகூடியால் துன்பப்படும் ஒரு
பாபு "என்வீடோ எரிவாய் நாகம்.எத்தி
சை நோக்கினுஞ், சுகமே யில்லை." யென்
று சொல்லக்கேட்டிருக்கிறேன். உமதுபத்தியட்சம்.
த்தினி எவ்வளவு நற்குண முடையவளாயினும், உம்மிடத்தில் சிறிது இஷ்ட
முள்ள வரையில் வேறொருத்தியிடத்தி
ல் நீரிஷ்டம் வைத்திருக்கச் சகியாள். நா
னே சுதாவில்க் கடிதமெழுதின படியால்
உம்மிஷ்டரில் யாராவது இப்படி யெழுதி
ச்சொன்னதாய்ப்பாவித்து இதை அலக்ஷி
யஞ் செய்யக் கூடாது. பங்காளத்தாராத்தியாசனம்என்பது அழகியாகிய வசா

ளின் க்ஷேமத்தை மன்றிற் கொண்டவ
ளாகையால், உமதுசவுக்கிய விர்த்தியின்
பொருட்டே நீர்பெண்டின்மேற் பெண்
டுகொள்ளாதிருக்கக்கோருகிறேன், நீருத்
தேசித்திருக்கிறகாரியம் பழியுள்ளதென்
றும், நியாயவிரோதமென்றும், முதல்க
ல்லியாணத்தில் உமது பெண்சாதிக்குச்
செய்து கொடுத்த பிரமாணத்தி னின்று
ம், தவருகிறி ரென்று கடவுளின் வாக்கா
கிய மனசாக்ஷியானது உன்னை வருத்துகி
றதாக எனக்குத் தெரியவருகிறது. ஆத
லால் மனசாக்ஷி சொல்வதற்கிணங்கி ம
ணம்புரியப்போகிற பெண்ணின் தகப்ப
னுடு செய்த ஏற்பாடுகளை ரத்துசெய்யு
ம்படி அவருக்கெழுதுவாயாக.

இப்படிக்கி
என்னன்புள்ள பாபுவே!
ஆந்தரியமாக உமது க்ஷேமத்தைக்கோரு
ம் சிநேகிதையாகிய.

* * * *

பகவத்கீதை- உபந்நியாசம்.

இந்தப் பிரபஞ்சரூபமான காரியங்களின் அழிவிற்குப் பிரளயமென்று பெயர். அது காலவிதமானது. நித்தியப்பிரளயம்,, நைமித்திகப் பிரளயம், பிராகிருதப்பிரளயம், ஆத்தியந்திகப்பிரளயம், என. நித்தியப்பிரளயந்தான் சுழுத்தி என்பது. நைமித்திக பிரளயமாவது, பிரம்மாவினுடைய தினப்பிரளயம். பிராகிருதப்பிரளயமாவது, பிரம்மாவின் தேகத்தோடு ஜகமே நாசமடைதல். ஆத்தியந்திகப் பிரளயமாவது, பிரம்மசாட்சாத்காரத்தினுலே, அவிச்சையாகிய காரணத்தோடு பிரபஞ்சமுழுதும் நிவர்த்தியாய்ப்போதல். இந்தநிவர்த்தியினுலே ஆனந்தமயமான வடிவைப் பெறுதலாகிய முத்தியுண்டாகிறது. பிரம்ம சாட்சாத்காரம் என்பது தனக்கும் பிரம்மத்திற்கும் ஐக்கிய பிரத்தினி எவ்வளவு நற்குண முடையவளாயினும், மனனம், நிதித்தியாசனம், இவைகளோடுசேர்ந்த வேதாந்த வாக்கியங்களால் உண்டாகின்றது. சிரவணம் என்பது, நியாயத்தோடுசேர்ந்த பொருள்களை ஒரு ஆசிரியனிடத்திற் கேட்குதல். மனனம் என்பது, கேட்டபொருள்களில் ஐயம், வேற்றுமை தோன்றின், அவற்றைத் தீர்க்கும்படியாக மனத்துக்குள் யுக்தியால்சோதித்தல். நி

னையினாலே, விடயங்களில் செல்கின்ற மனத்தை அவ்விடயங்களினின்றும் இழுத்து ஆத்துமாவினிடத்தில் அசையாமல் நிறுத்துதல். இது சாட்சாத்காரமான பிரம்மக்கிய ஞானத்திற்கு அடுத்த காரணமாயிருக்கின்றது. இந்தஞானம் தீவினையழிவதனால் உண்டாகின்றது. கருமங்களை யாசரிப்பதனால் தீவினையொழியும். அதனால் அவனவன் வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் தக்கபடி கருமத்தைச்செய்தல், படிப்படியாய் ஞான முண்டாவதற்குக் காரணம்.

கஷாயேகர்ம பிஃபக்வேததோ ஜ்ஞானம்ப்ரவர்த்தே.

இந்தச் சிரவணமுதலியவற்றைச் செய்வதற்கு முத்தியை விரும்பியவற்கே யதிகாரமுண்டு. அந்தமுத்தி விருப்பத்தில், இவை நித்தியமென்றும், இவை அநித்தியமென்றும் பொருள்களின் வேற்றுமையை யறிதலும், விஷயபலன்களில் வெறுப்பும், சமம், தமம், உபரதி, திதிட்சை, சமாதானம், சிரத்தை, இவைகளும் பயனைத்தருவன. சமமென்பது உட்பொறிகளையடக்குதல். தமமென்பது வெளிப்பொறிகளையடக்குதல். உபரதியென்பது அசையின்மை. திதிக்ஷையென்பது பொருமை. சமாதானம் என்பது ஒருஇடத்திலேயே மனதைநிறுத்துதல். சிரத்தையென்பது ஆசிரியரிடத்திலும், நூல்களிடத்திலும் நம்பிக்கை.

கீழ்ச்சொன்னவாறு சகுணப்பிரம்மத்தை யுபாஸனை செய்தால் சித்தசமாதானம் உண்டாகின்றபடியினாலே, அது நிர்க்குணப் பிரம்மஸாட்சாத்காரத்துக்கு உபயோகமாகின்றது.

விசேஷம்பரம்ப்ரஹ்ம ஸாக்ஷாத்க்ருதயேநிஶ்சலாம்,
யேமந்தாஸ்தேநுகம்ப்யம் தேனவிசேஷநிரூபணை:;
வஶீக்ருதேமநஸ்யேஷாம் நகுணப்ரஹ்ம ஶீலனாத்,
தஜேவாவிர்பவேத்தஸ்ய ஸதேதோபாதிகல்பநம்.

நிர்குணப்பிரம்மத்தை ஸாட்சாத்கரிக்க வல்லமையில்லாதவர், ஸகுணப்பிரம்மத்தை உபாஸனை செய்யவேண்டியது. இதனால் மனம் சுவாதீனப்பட்டவுடன், நிர்க்குணப் பிரம்மம் தானே தோற்றும்.

ஸகுணப்பிரம்மத்தையுபாஸனைசெய்பவர்கள், அர்ச்சிரதியென்றபெயருடைய மார்க்கத்தினால் பிரம்மலோகத்தையடைந்து, அதில் சிரவணாதிகளால் ஸாட்சாத்காரம்பெற்று பிரமனோடு முத்தியடைகிறார்கள். கருமத்தை யனுஷ்டிப்பவர் தூமாதியென்று சொல்லப்பட்ட மார்க்கத்தினால் பிதுர்லோகத்தையடைந்து, அங்கே இன்பத்தையனுபவித்து, திரும்பியும், நல்வினை தீவினைகளுக்கேற்ப, மனிதர்முதலான பிறப்புகளையடைகிறார்கள். விலக்கப்பட்ட கருமங்களைச்செய்பவர், ரௌரவமுதலான நரகங்களிற்சென்று அவைகளில், தம்பாவங்களுக்கேற்பத் துன்பங்களை யனுபவித்துத் திரும்பியும் நாய் நரிமுதலிய விலங்குகளாயும், தாவரமுதலியவாயும் வந்துபிறந்து நசிக்கின்றார். நிர்க்குணப்பிரம்மத்தை யுபாஸிப்பவர், பிராரப்தமாயிருக்கிற கருமங்களைமாத்திரம் அனுபவித்து மிகுந்த நல்வினைகளை நன்பர்களிடத்தும், தீவினைகளைப்பகைவரிடத்தும் விட்டுவிட்டுக், கைவல்லியத்தையடைந்து, ஒப்புயர்வில்லாத ஆநந்தத்தை யனுபவிக்கிறார்கள். இது அத்துவைதச்சுருக்கம். இனிவிசிஷ்டாத்துவைதத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம்.

விசிஷ்டாத்துவைதச்சுருக்கம்.

இந்தமதத்தில்சித்தென்றும் அசித்என்றும், ஈச்சுரனென்றும், பதார்த்தங்கள்மூன்று. சித் என்பது, ஆத்துமா. அந்த ஆத்துமாவானது ஞானத்தினும், இந்திரியத்தினும், மனத்தினும், புத்தியினும், வேறுனதாய், அஜடமாய், ஆனந்தவடிவாய், நித்தியமாய், அணுவாய், உறுப்பிலதாய், விகாரமிலதாய், ஞானத்திற்கு இருப்பிடமாய், ஈச்சுரனுக்குச், சேஷமாய் இருக்கின்றது. அஜடம் என்பது சுயம்பிரகாசம். மற்றொன்றினுடைய, ஞானத்தின் உதவியை வேண்டாமல் தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருக்கின்றது. அணுவென்பது மிசவுஞ் சிறிதான உருவையுடையது. அவ்வளவு சிறுருவத்தோடு ஓரிடத்திலேயிருந்தாலும், உடம்புமுழுதும் உண்டாகின்ற சுகத்தையும், அசுகத்தையும், அனுபவிக்கிறகுணம் எப்படி உண்டாகிறதெனில், இரத்தினம் ஓரிடத்திலே யிருந்தாலும், அதன் ஒளி முழுதும் பரவுதல்போலப் பரவுகின்ற ஞானத்தினாலேயுண்டாகிறது. விகாரமின்மைமுதலிய இலக்கணங்கள் முன்பே கூறப்பட்டன. சேஷம்என்பது உட்பட்டது. நமக்கு ஆடையாபரணம்போலே யுள்ளது. மேற்சொன்னபடி இந்தஆத்துமாவை ஆஸ்ரயமாகவுடைய ஞானத்தைத், தருமபூதமன்பர், இதுதான் அத்துவைத மதத்தில் விருத்தியவச்சின்ன சைதன்னியம் என்னப்பட்டது. நான் குடத்தைக்காண்கிறேன், என்னும் அனுபவத்தினால் "நான்" என்னும் சொல்லால் குறிக்கப்பட்ட ஆத்துமாவினும் ஞானம் வேறுபிருக்கிறது. அந்த ஞானமானது ஆ

த்துமாவைப்போல, நித்தியப்பொருளாய், ஜடமாய், அனர்தவடிவாய், இருக்கிறது. ஆத்தும ஸ்வரூபமானது, அஞ்ஞயமாய், சும்புதல் மலர்தல் இல்லாமல், ஒரே வடிவாய், தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருக்கிறது. ஞானமானது, தர்மமாய், வேம்புதல் மலர்தலுள்ளதாய், தன்னினும் கூறுய் பொருள்களையெல்லாம் விளங்கச் செய்வதாய் ஆத்மாவுக்கே விளங்குவதாய் இருக்கின்றது. அதிற்சிலருடைய ஞானம் எப்போதும் விபு. சிலருடைய ஞானம் விபு வல்ல. மோட்சகாலத்தில் எல்லாருடைய ஞானமும் விபு. ஞானம் உண்டாயிற்று அழிந்தது என்னும் உலகவழக்குக்குச் காரணம். அந்த ஞானம் பொறிகளின் வழியாய்ப் பொருள்களைப் பற்றுவதற்காகப் பரவுதலும் பரவாமையுமாம். ஆதலின், பரவுதற்குழிலாகிய உண்மை இல்லாமைகளை அதற்கு இடமாகிய ஞானத்தின் மேலேற்றிச் சொல்லலாயிற்று.

விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம் செய்பவர்கள் அனுப்புந் தொகை சேர்ந்ததைக்குறித்து, உத்தரப்பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லையாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக்குறித்து, மறுமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

	காப்பி,
சென்னை, இராமாஞ்சையர்.	க
,, விசுவநாதஅய்யர்.	க
,, குழந்தைவேலுமுதலியார்.	க
,, கந்தசாமிமுதலியார்.	க
,, கனகசபைமுதலியார்.	க
,, குருசாமிமுதலியார்.	க
,, இரங்கசாமிநாயுடு.	க
,, குமாரதேவமுதலியார்.	க
,, சபாபதிமுதலியார்.	க
,, செ, சுப்பராயஆச்சாரி.	க
,, கா, சுப்பராயமுதலியார்.	க
,, க, இராகவமுதலியார்.	க
முல்லைவாசல், கிருஷ்ணையர்.	க
ஆர்காடு, பாலகிருஷ்ணமுதலியார்.	க
,, இராஜகோபாலமுதலியார்.	க
,, வரதராஜபிள்ளை.	க
,, அரங்கசாமிமுதலியார்.	க
திருவாதி, சாமாவையர்.	க
ஆரணி, இரத்தினவேலுமுதலியார்.	க
,, முத்துசாமிபிள்ளை,	க
கிருஷ்ணகிரி-வெங்கிடாசல முதலியார்.	உ
,, சுப்பராயலு நாயுடு.	க
சங்கரிதுருக்கம் - சொக்கலிங்க பிள்ளை.	க
புலு - அம்பலவாணம் பிள்ளை.	உ
கொயம்புத்தூர் - கோவிந்தராவு.	க
,, திருமலையய்யர்.	க
நாகப்பட்டணம்-வைத்தியலிங்கம் பிள்ளை.	க
,, சூரியமூர்த்தி பிள்ளை.	க
கஞ்சி - விராசாமி பிள்ளை.	க
மதுரை - திரு-கனகசபை முதலியார்.	க
,, சோமசுந்திர முதலியார்.	க
,, இரத்தின முதலியார்.	க
,, மாணிக்கம் பிள்ளை.	க
,, அளகரையங்கார்.	க
திருநெல்வேலி - ஹரிராவு.	க
தஞ்சைநகரம்-ஜகன்னாதாசாரியர்.	க
,, பிஞ்சுபாணி முதலியார்.	க
,, வெங்கிடாசல முதலியார்.	க
,, கிருஷ்ணசாமி நாயுடு.	க
,, அருணகிரி முதலியார்.	க
,, ஸ்ரீநர வெங்கிடராமையர்.	க
,, ராமசேஷ அயயர்.	க
,, ராத்தினசாமி பிள்ளை.	க
,, ஸ்ரீனிவாச அய்யங்கார்.	க
தஞ்சைநகரம், இராமகிருஷ்ணநாயுடு	க
பொன்னையநாயுடு.	க
,, துரைசாமிஅய்யங்கார்.	க
,, முனிசாமிநாயுடு.	க
,, விஸ்வலிங்கமுதலியார்.	க
பெங்களூர், நாகலிங்கமுதலியார்.	க
,, இராமசாமிமுதலியார்.	க
திண்டிவனம், முருகேசபிள்ளை.	க
பூவிருந்தமல்லி, செல்லப்பநாயகர்.	க
திருச்சிநாபள்ளி, ஆனந்தராயமுதலியார்.	க
கடலூர், இராமசந்திரநாயுடு.	க
கரூர், முத்துசாமிபிள்ளை.	க
,, சுந்திரராஜமுதலியார்.	க

சென்னப்பட்டணம்,— தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணிமுதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.